விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU
Ria
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 03 வெள்ளிக்கிழமை (18.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

## மக்கள் பொறுப்பின்றி தொடர்ந்து செயற்பட்டால் நாட்டை முடக்க வேண்டிய நிலை ஏற்படலாம்
### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)
மக்கள் பொறுப்பின்றி செயற்பட்டால், மீண்டும் நாடு முழுவதையும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் இந்த நிலை நீடித்தால் குறிப்பாக கடுமையான நடமாட்டக் கட்டுப்பாடுகள் விதிக்க நேரும் என அரச வைத்திய 19


## கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுக்கு
### ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள்

05ஆம் பக்கம் பார்க்க

## நுணாவிலில் போதையுடன் மூவர் கைது

(சாவகச்சேரி)
நுணாவிலில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை 19

## கொரோனா பரவும் அபாயம்
# வடக்கு சந்தைகளை பூட்டுமாறு உத்தரவு
### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பொதுச் சந்தைகளும் மறு அறிவித்தல்வரை மூடப்படும் என வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் 2 வாரங்கள் மிக அவதானம் தேவை
### சவேந்திர சில்வா

6ஆம் பக்கம் பார்க்க

### பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோருக்கு
## எழுமாற்று பிசிஆர் பரிசோதனை
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(யாழ்ப்பாணம்)
பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் மக்களை எழுமாறாகத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பிசிஆர் பரிசோதனைகளை நடத்துவதற்கான நடமாடும் திட்டத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கோவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயலணியின் தலைவர், இராணுவத் 19

### யாழ்.மாவட்டத்தில்
## ஆயிரத்து 400 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்
### அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட் - 19 நோய்த் தொற்று நிலைமை 19

## புலிகளை மகிமைப்படுத்தி உரையாற்றுவதைத் தடுக்க
### பாராளுமன்றில் புதிய சட்டம்
### அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)
புலிகளை மகிமைப்படுத்தி உரையாற்றுவதைத் தடுக்க பாராளுமன்றில் 19

## மருதனார்மடம் கொரோனா கொத்தணி யாழில் நேற்றும் 5 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நேற்றும் 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 478 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் இணுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய் என மூன்று பிரதேசங்களைச் சேர்ந்த மூவர் தொற்றுடன்அடையாளம் காணப்பட்டுள்ளனர். 19

## ரூ.40 இலட்சம் பெறுமதியான போதைப்பொருளுடன்
### நெல்லியடியில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)
நெல்லியடிப் பகுதியில் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில், 19

### முல்லை இளைஞன்
## பிரான்ஸில் கொரோனாவுக்கு பலி




19

## மகனை ஏற்றச் சென்ற தந்தை விபத்தில் பலி
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)
மகனை ஏற்றச்சென்ற தந்தை ஒருவர் விபத்துக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். 19

# கண்ணீர் அஞ்சலி



காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
**முன்னைநாள் அதிபர்** - காரைநகர் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, **முன்னைநாள் உப அதிபர்** - காரைநகர் யாழ்றரன் கல்லூரி மற்றும் காரைக் கணித மேதையும்
புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமார், ஆசிரியர் சிவகுமார் ஆகியோரின் தந்தையும் பிரபல சமூக சேவையாளருமாகிய

## அமரர் கே.கே.நடராஜா

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-931)

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

E.S.P. நாகரத்தினம்,
கஜமுகன் ஹாட்வெயார்.

# கால்நடை பகிரங்க ஏல விற்பனை

1979 ஆம் ஆண்டின் கமநலசேவைகள் சட்டம் இலக்கம் 58 இற்கு அமைய 14.12.1979 இல் வர்த்தமானி மூலமாக வெளியிடப்பட்ட இலக்கம் 66/14 விதிமுறைகளுக்கு அமைவாக 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 92 இற்கு அமைய வேலணை கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் கீழ் விபரிக்கப்படும் கால்நடையினை கீழ்க் குறிப்பிடப்பிடும் இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**1. இடம் - வேலணை வடக்கு கமக்காரர் அமைப்பின் பட்டி (குறிநாச்சிகுல வீதி)**
**திகதி - 21.12.2020 திங்கட்கிழமை**
**நேரம் - காலை 9.30 மணி**

### கால்நடை விபரம்

உரிமையாளர் பெயர் - தலைவர், கமக்காரர் அமைப்பு, வேலணை வடக்கு.
முகவரி - வேலணை வடக்கு
கால்நடை வகை:- மாடு

**2. இடம் - வேலணை வடகிழக்கு அமைப்பின் பட்டி (1 ஆம் வட்டாரம்)**
**திகதி - 21.12.2020 திங்கட்கிழமை**
**நேரம் - காலல் 10.00 மணி**

(C-930)

### கால்நடை விபரம்

உரிமையாளர் பெயர் - தலைவர், கமக்காரர் அமைப்பு, வேலணை வடகிழக்கு.
முகவரி - வேலணை வடகிழக்கு
கால்நடை வகை:- மாடு

**குறிப்பு :-** ஏலத்தில் வெற்றி பெற்றவர் உடனடியாக ஏலத்தின் பெறுமதியினை முழுமையாக பணமாகச் செலுத்தி அவ்விடத்திலிருந்து கால்நடையினை உடனடியாக அப்புறப்படுத்தல் வேண்டும்.

**கால்நடை விபரம்**

| பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள கால்நடைகளின் விபரம் வேலணை வடக்கு கமக்காரர் அமைப்பின் கீழ் | | | | | |
|---|---|---|---|---|---|
| **உரிமையாளர் பெயர்** | **முகவரி** | **இனங்காண் இலக்கம்** | **கால்நடை வகை** | **வயது (அண்ணளவாக)** | **நிறம்** |
| தலைவர், கமக்காரர் அமைப்பு, வேலணை வடக்கு. | வேலணை வடக்கு | 0112 | நாம்பன் | 05 வயது | வெள்ளை |
| | | 0113 | நாம்பன் | 01 வயது | வெள்ளை |

**கால்நடை விபரம்**

| பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள கால்நடைகளின் விபரம் வேலணை வடகிழக்கு கமக்காரர் அமைப்பின் கீழ் | | | | | |
|---|---|---|---|---|---|
| **உரிமையாளர் பெயர்** | **முகவரி** | **இனங்காண் இலக்கம்** | **கால்நடை வகை** | **வயது (அண்ணளவாக)** | **நிறம்** |
| தலைவர், கமக்காரர் அமைப்பு, வேலணை வடகிழக்கு. | வேலணை வடகிழக்கு | 0010 | நாம்பன் | 06 வயது | கறுப்பு மண்ணிறம் |

**கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவைகள் நிலையம், வேலணை.**

# மரண அறிவித்தல்

## சத்தியப்பிரியா மனோகரன்

**பிறப்பு : 22.02.1981 இறப்பு : 16.12.2020**

கோண்டாவில் மேற்கு, பாரதி வீதியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியப்பிரியா மனோகரன் நேற்று முன்தினம் (16.12.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும் சின்னத்துரை, கமலாதேவி, ரத்தினசபாபதி, சத்தியசோதி, சின்னத்தம்பி, முத்துப் பிள்ளை, சீவரத்தினம், கௌரிஅம்மா, சுப்பிரமணியம், நாகேஸ்வரி ஆகியோரின் மருமகளும் நாகமுத்து, செல்லம்மா, செல்லத்துரை, இராசம்மா ஆகியோரின் பேத்தியும் சிவஞ்ஞானம், இராசாத்தி, துரையர், செல்லமணி, திசைவீரசிங்கம், சுலோசனா, காலஞ்சென்ற நடராசா, பரிமளம் ஆகியோரின் பெறாமகளும் தர்மசீலன், ஜெயசீலன், சத்தியவாணி ஆகியோரின் சகோதரியும் ரவீந்திரன், சசிகலா, பகிரதன், காலஞ் சென்றவர்களான சரதன், தவதன், சுரேந்திரன், சுதன் மற்றும் வளர்மதி, சுதா, அஜந்தா, சுரேஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.



பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு. (4985)

தகவல்:
குடும்பத்தினர்

# வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சி; எப்படி எதிர்கொள்ளப் போகிறது இலங்கை?

**(கொழும்பு)**

**நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை நோக்கி இலங்கை நகர்ந்துள்ளதை இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.**

2020 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தி 16.3 சதவீத வீழ்ச்சியை நோக்கி சரிவடைந்துள்ளதாக திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டில் பதிவான வளர்ச்சி வீதத்தின் 1.1 சத வீதத்துடன் ஒப்பிடும் போது, இலங்கை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பெரிய வீழ்ச்சியை நாடு சந்தித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொவிட்-19 தாக்கத்திற்கு மத்தியில் உலகிலுள்ள பல நாடுகள் இவ்வாறான பொருளாதார சரிவை நோக்கி நகர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 1.1 சதவீதத்துடன் நேரான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 16.3 சதவீத மறையான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவிக்கின்றது.

2020 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டில்நிலையான விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 1,936,273 மில்லியனாக குறைந்து பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வரலாற்றில் இதுவரை இவ்வாறானதொரு வீழ்ச்சி பதிவாகவில்லை என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள எழ வேண்டுமாயின், அதனை இருவிதமாகப் பார்வையிட முடியும் எனவும் தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், சில்லறை வர்த்தகம், உள்ளூர் விவசாயம் ஆகிய துறைகளினாலேயே நாடு தற்போது சற்றேனும் ஒரு வளர்ச்சியை நோக்கி உள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

எனினும், குறித்த துறைகளின் வளர்ச்சியானது, நாட்டின் பொருளாதாரத்தை நேர் நிலைக்குக் கொண்டு வருவதற்கான துறைகளாக கணிப்பிட முடியாது எனவும் சுற்றுலாத்துறை, ஆடை ஏற்றுமதித்துறை மற்றும் தேயிலை ஏற்றுமதித்துறை ஆகிய மூன்று துறைகளையும் வளர்ச்சி அடைய செய்வதன் ஊடாகவே இந்த பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர முடியும் என அவர் குறிப்பிடுகின்றார்.

கொவிட் தொற்று உலகில் முழுமையாக இல்லாதொழிக்கப்படும் பட்சத்திலேயே இலங்கை போன்ற நாடுகளுக்கு சாதகமான நிலைமை ஏற்படும் என அவர் தெரிவிக்கின்றார்.

எனினும், இப்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமாகாது எனக் கூறிய அவர், எதிர்மறையான நிலைமையை குறைக்க கூடி சாத்தியம் மாத்திரமே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

"இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்யாது, ஆனால், உங்களுடைய பொருட்களை நாங்கள் கொள்வனவு செய்ய வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-4)

# அமைச்சர் வாசுதேவவிற்கு எதிராக எதிர்ப்பைக் காட்டிய மக்கள்



(எகெலியகொட)

எகெலியகொட- தராபிட்டிய பகுதியில் இடம்பெற்ற நிகழ்விற்கு வருகைதந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நேற்று வியாழக்கிழமை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பகுதியில் நீர் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காகவே வாசுதேவ நாணயக்கார விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, அவ்விடத்திற்கு வந்த அமைச்சருக்கு எதிராக அப்பிரதேச மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த நீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் பல சிக்கல்களுக்கு நாம் முகம்கொடுக்க நேரிடும் என அவருக்கு சுட்டிக்காட்டியே எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த நிகழ்வை நடத்துவதற்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு மக்கள் இடமளிக்கவில்லை. இதனால் அவர் அவ்விடத்தில் இருந்து வெளியேறினார். (நி-4)

# கோண்டாவில் திருச்செல்வம் வீதியின் நிலை; கவனிப்பார்களா? உரியவர்கள்



(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட கோண்டாவில் கிழக்கு திருச்செல்வம் வீதியில் கொட்டப்படும் குப்பைகளால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் மாத்திரமன்றி மேற்படி வீதியில் பயணிக்கும் பல நூற்றுக்கணக்கான மக்களும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

வேறு பகுதியைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு குப்பைகளைக் கொட்டி விட்டுச் செல்கின்றனர்.

பொலித்தீன்கள், பிளாஸ்ரிக் கழிவுகள், மரக்கறிக் கழிவுகள், உரித்த கோழிக் கழிவுகள், பம்பஸ்கள் எனப் பல வகையான கழிவுகளும் இவ்வாறு கொண்டு வந்து கொட்டப்படுகிறது.

இவ்வாறு கொட்டப்படும் குப்பைகள் நாய்களால் வீதி எங்கும் இழுத்துச் செல்லப்படுகின்றன.

தற்போது மழைக்காலம் என்பதால் குறித்த குப்பைகளால் சுற்றாடல் சீர்கேடு ஏற்படுவதுடன் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகவும் உள்ளது. அத்துடன் விபத்துக்கள் ஏற்படும் ஆபத்தும் உண்டு.

இவ் விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-18)

# உறவினர்களின் வீடுகளுக்கு செல்வதை தவிர்த்து குடும்பத்தோடு நத்தாரைக் கொண்டாடுங்கள்

## பேராயர் கோரிக்கை

(கொழும்பு)

நத்தார் பண்டிகைக் காலத்தில் பயணங்களை மட்டுப்படுத்துமாறு கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

பேராயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நத்தார் பண்டிகையின் போது ஏனைய மக்களைப் போன்று நாமும் அர்ப்பணிப்புடன் செயற்படுவது உகந்தது.

மேல் மாகாணத்தில் கொரோனா நிலைமை பாரதூரமாக உள்ளதால் கொழும்பிற்குள் பிரவேசிப்பதையோ அல்லது கொழும்பில் இருந்து வேறு பகுதிகளுக்குச் செல்வதையோ இயன்றளவு குறைத்துக் கொள்ளுங்கள்.

இம்முறை நத்தாரின்போது உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வதை தவிர்க்குமாறும் அத்தோடு, வர்த்தக நிலையங்களுக்குச் செல்வதை மட்டுப்படுத்துமாறும் ஒன்றுகூடல்கள், விருந்துபசாரங்களைத் தவிர்க்குமாறும் கோரியுள்ளார்.

இதேவேளை, நத்தாரை முன்னிட்டு நடத்த திட்டமிட்டுள்ள களியாட்ட நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள், விருந்துபசார நிகழ்வுகளை இரத்துச் செய்து அந்த நிதியை கொரோனாவினால் நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு வழங்குமாறு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடம் பேராயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தனிமைப்படுத்தப்படாத பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் 50 இற்கும் மேற்படாத மக்களை ஒன்றுகூட்டி ஆராதனையை நடத்த அருட்தந்தையர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

# வெள்ளவத்தையில் மற்றுமொரு பகுதி முடக்கம்

(கொழும்பு)

கொழும்பு-வெள்ளவத்தை பகுதியில் மற்றுமொரு பகுதி நேற்றுக்காலை முதல் முடக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை, நசீர்வத்தை பகுதியே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று அதிகரிப்பை அடுத்து உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

# இனவாதிகளின் கருத்துகளுக்கு அடிபணிந்து

# மாகாண சபை முறைமையை பலவீனப்படுத்தக்கூடாது

(கொழும்பு)

**“இந்நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்கள் உண்பதற்காக மட்டுமே வாய்திறக்க வேண்டும். அவர்களுக்கு ஒருபோதும் உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்ற மமதையில் செயற்படும் பேரினவாத அரசியல்வாதிகள், அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள உரிமைகளைக்கூட பறிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான சதித்திட்டங்களை தீட்டி வருகின்றனர்.**

இனவாதிகளின் கருத்துக்களுக்கு அடிபணிந்து, மாகாணசபை முறைமையை பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடக்கூடாதென ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம்தொடர்பாக வேலுகுமார், நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஓர் அங்கமாகவே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது, அம்முறைமை நீக்கப்பட வேண்டும்,என மீண்டும் கோஷமெழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

புதியதொரு அரசியலமைப்பு இயற்றப்படவுள்ள சூழ்நிலையில், மாகாணசபை முறைமைக்கு எதிராக அரசாங்கத்தின் அனுசரணையுடன் இயங்கும் இனவாதிகள் போர்க் கொடி தூக்கியுள்ளமை பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.



குறிப்பாக தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையை புதிய அரசியலமைப்பின் ஊடாக பலவீனப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா? என்ற அச்சமும் மேலோங்கியுள்ளது.

மத்தியிலிருந்து மாகாணங்களுக்கு மேலும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும், மாகாண சபைகள் முறைமை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என தமிழ் பேசும் மக்கள் கோரிக்கை விடுத்துவரும் நிலையில், அவர்களின் உரிமைக் குரலை நசுக்குவதற்காக, ஒடுக்குவதற்காக அரசாங்கம் திட்டமிட்ட அடிப்படையில் இனவாதிகளை களமிறங்கியுள்ளதா? என்ற வினாவும் எழுகின்றது.

அதேவேளை, தம்வசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. பெரும்பான்மையின் மக்களை இயக்கக்கூடிய இனவாத சக்திகள் உள்ளன என்ற நம்பிக்கையில் அரசாங்கம், மாகாண சபை முறைமையில் கைவைக்கும் பட்சத்தில் அது பாதகமான எதிர்விளைவு களை ஏற்படுத்தக்கூடும். இராஜதந்திர மட்டத்திலான நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டிவரும்” என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)


## மணி விழா வாழ்த்துக்கள்

### திரு.சுப்பிரமணியம் விவேகானந்தன்

SLPS-II, B.A, PGDE (Merit) M.A.



இன்று (18.12.2020) அகவை அறுபதை அடையும் யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலையின் அதிபர் **திரு.சுப்பிரமணியம் விவேகானந்தன்** அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் சேவைக் காலம்**
1989.11.28–2007.12.23

**அதிபர் சேவைக் காலம்**
2007.12.24–2020.12.17

**கோட்டக் கல்விப் பணிப்பாளரும், அதிபர்களும்**
**கோப்பாய்க் கல்விக் கோட்டம்.**


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனப்பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 10, தாமோதரம்பிள்ளை வீதி, 37,37A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் பரமு ஆறுமுகம் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம், தற்காலம் கொழும்பு-05 பார்க் வீதி, அண்டர்சன் தொடர்மாடி, இல. சீ3 இல் வசிக்கும் ஆறுமுகம் குலசேகர பரமவம்சா கைம்பெண் உமாதேவி என்பவர் பிரசித்த நொத்தாரிசு நளினி கணேஷயோகன் முகதாவில் 2013.11.23 ஆம் திகதியிடப்பட்ட 3422 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய விளம்பல் உறுதிமூலம் சீ.3, அண்டர்சன் தொடர்மாடி, பார்க் வீதி, கொழும்பு -05 ஐ சேர்ந்த ஆறுமுகம் குலசேகரர் பரமவம்சா அவர்களால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு இல.7220/ காணி வழக்கின் பிரகாரம், குறித்த வழக்குத்தீர்வை காலஞ்சென்ற கணவரான ஆறுமுகம் குலசேகர பரமவம்சாவினது எனவும், அவரின் மரணத்திற்குப்பின் மனைவியான தனக்கே முற்றான உரித்துடையதெனவும் வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற வழக்கு இல.7220/ காணி இல் கோவையிடப்பட்ட, இணக்கம் காணப்பட்ட நிகழ்ச்சிக்குறிப்பின் பிரதி விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் ஆறுமுகம் குலசேகர பரமவம்சா கைம்பெண் உமாதேவி பிரசித்த நொத்தாரிசு சீனியப்பா பொன்னம்பலம் சிவஞானம் முகதாவில் 2019.09.19 ஆம் திகதியிடப்பட்ட 2921 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெகமவிரனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று, சாவகச்சேரி இறை “பரமர் வளவு” நிலப்பரப்பு ஐந்து (05) குழி பூச்சியம் ஐந்து தசம் பூச்சியம் ஒன்று (05.01). இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்களால் 10.09.2019 ஆம் திகதியில் அளந்து வரைந்த 7156 இலக்கத்தின்படி துண்டு-1, துண்டு-2 எனச்சுட்டப்பட்ட பாகங்கள் நிலப்பரப்பு ஐந்து (05) குழி பூச்சியம் ஐந்து தசம் பூச்சியம் ஒன்று (05.01) நிந்தமாக ஆட்சி செய்யப்பட்டு வரும் வரகு நிலம் அடங்கலும் அதைச்சேர்ந்தவைகள் அனைத்தும். இதற்கு எல்லை,

வடக்கு: நாகேந்திரன் மனைவி இரத்தினபூபதிக்குரிய ஆதனம்
கிழக்கு: பொது வீதியும் மகாதேவன் கேதீஸ்வரனுக்குரிய ஆதனமும்
தெற்கு: மகாதேவன் கேதீஸ்வரனுக்குரிய ஆதனமும் தாமோதரம்பிள்ளை வீதியும்
மேற்கு: துரைராசா ஜெகதீஸ்வரன் மனைவி சற்குணாவதிக்கும் சிவகரன் மனைவி பாரதிக்குமுரிய ஆதனங்கள்.

தற்போது பாலசிங்கம் ஜெகமயூரன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்துமூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதபட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(C-927)


## மணிவிழா வாழ்த்துக்கள்

### உயர்திரு. சுப்பிரமணியம் விவேகானந்தன்

**அதிபர்** (SLPS-II),BA,PGDE(Merit), M.A.

**யாழ்/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலை**






அத்தை மாமாவாய்
அன்பிற்கு
இனியவராய்
அறிவிற்கு
வழிகாட்டியாய்
ஆசானாய்
அதிபராய்
இன்று...
மணிவிழா
நாயகனாய்
பல்லாண்டு வாழ்க

வாழ்த்துவோர்:
மருமக்கள்- மதுராகவன், தேருஜா

(4984)

# தமிழ் அரசியல் கைதிகள் இல்லையா அல்லது இல்லாமல் ஒழிக்கப்பட்டனரா?

## இராதாகிருஷ்ணன் கேள்வி



(கொழும்பு)

'இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லையெனில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன நடந்தது' என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

'இலங்கையில் அரசியல் கைதிகளென எவருமில்லை. அவ்வாறு இருந்தால் ஒருவரின் பெயரையாவது, அவ்வாறு கூறுபவர்கள் வெளியிடவேண்டும்' என உதயகம்மன்பில அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது கருத்து வெளியிட்டிருந்தார்.

நுவரெலியாவில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வினவிய போதே வே.இராதாகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, "அமைச்சர் உதய கம்மன்பிலவின் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விபரங்களை பல தடவைகள் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். நாமும் அது பற்றி கதைத்துள்ளோம். நல்லாட்சியின்போது தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அப்படியானால் இருந்த கைதிகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் இருக்கின்றனரா? அல்லது இல்லாமல் செய்யப்பட்டுள்ளனரா? என்ற சந்தேகம் எழுகின்றது.

அதேவேளை, மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். அத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி தனித்து போட்டியிடவேண்டும் என்பதே பங்காளிக்கட்சியாக இருக்கும் மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். இது பற்றி கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்.

மாகாணசபை முறைமை தொடரவேண்டும். அவ்வாறு இல்லாமல் அதனை இரத்து செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அது பாரிய நெருக்கடி நிலைமையை உருவாக்கிவிடும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# நான்கு குழந்தைகளை பிரசவித்த கொரோனா தொற்றுக்குள்ளான பெண்

## குழந்தைகள் நலமென்கிறது வைத்தியசாலை வட்டாரம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண்ணொருவர் கொழும்பு டி சொய்சா வைத்தியசாலையில் நான்கு குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தைகளையே அவர் பெற்றெடுத்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குழந்தைகள் நல்ல உடல் நலத்துடன் இருப்பதாகவும் வைத்தியசாலையில் தனி தீவிர சிகிச்சை பிரிவுகளில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு குப்பியாவத்தையைச் சேர்ந்த 29 வயதுடைய குறித்த பெண் இரண்டு வாரங்களுக்கு முன்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ரஞ்சனுக்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு



(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நேற்று முன்தினம் உயர்நீதிமன்றில் அழைக்கப்படவிருந்த நிலையில் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

உயர் நீதிமன்ற வளாகத்தில் ஏற்பட்ட தீப்பரவல் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் காரணமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்த அனைத்து வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு விசாரணையும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கான அறிவிப்பு

அධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

(கொழும்பு)

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குப் பொருத்தமான ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான தகவல்கள் இணையத்தின் (Online) ஊடாக பெறும் காலத்தை நீடித்துள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாளை மறுதினம் 20ஆம் திகதி வரை தகவலைப் பெறும் காலத்தை கல்வியமைச்சு நீடித்துள்ளது.

மேலும், கல்வி அமைச்சின் வலைத்தளமான www.ncoe.moe.gov.lk க்குள் உள்நுழைவதன் ஊடாக பயிற்சியாளர்கள் தங்கள் தகவல்களை உள்ளிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 மற்றும் 2018 ஆண்டுகளில் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குப் பொருத்தமான ஆசிரியர் நியமனங்களுக்கான தகவல்களை இணையத்தளத்தில் கல்வியமைச்சு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# போலி தகவல்களை வழங்கும் கொரோனா நோயாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## மீண்டும் எச்சரிக்கும் பொலிஸார்



(கொழும்பு)

போலியான தகவல்களை வழங்கும்கொரோனா நோயாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பி.சி.ஆர். பரிசோதனைகளின் போதிலும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் போதிலும் பலர் போலியான தகவல்களை வழங்கியுள்ளமை கடந்த காலங்களில் பதிவாகியுள்ளன.

இந்த நடவடிக்கை தொடர்பில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர், அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.


போலியான விலாசங்கள் மற்றும் போலியான பெயர்கள் வழங்கப்படுமாயின், ஆள்மாறாட்ட குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு அமைய, அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

குற்றவாளியாக அடையாளம் காணப்படுவோருக்கு 5 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-4)


31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 14 . 12 . 1933



இறப்பு 19 . 11 . 2020

கணேசபிள்ளை தாமோதரம்பிள்ளை

19.11.2020 இல் இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் கணேசபிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தியறிந்து அனுதாபச் செய்திகள் பகிர்ந்தும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 19.12.2020 நாளை சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுவதுடன் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும் என்பதனை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

கொண்டக்கட்டை,
வல்வெட்டித்துறை.
T.P:- 021 205 5011

(C-926)

தகவல்:
சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள்

# வட்டு-உப்புவயல் குளம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு





(நல்லூர்)
இராணுவத்தினரால் புனரமைப்பு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, தென்மேற்கு உப்புவயல் குளம் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் வழிகாட்டலில் தியாகி அறக்கொடை நிறுவனத்தினரின் நிதிப் பங்களிப்பில் வட்டுக்கோட்டை தென்மேற்கு உப்பு வயல் குளம் புனரமைப்பு செய்யப்பட்டு நேற்றயதினம் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்.நண்பர்கள் அமைப்பு, வட்டுக்கோட்டை தென்மேற்கு விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ். இந்திய துணைத் தூதுவர், எஸ்.பாலசந்திரன், தியாகி அறக்கொடை நிறுவனத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன், வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், பிரதேச செயலாளர், தவிசாளர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (5-33)

# எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் அவதானம் தேவை

## கொரோனா குறித்து இராணுவத் தளபதி

(நல்லூர்)
எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் அவதானம் தேவை என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியில் குறிப்பாக யாழில் கொரோனா முதலாவது அலை தாக்கம் ஆரம்பம் முதல் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் சுகாதார நடைமுறைகளை வடபகுதி மக்கள் ஒழுக்கமாகவும் நேர்த்தியாகவும் கடைப்பிடிக்கிறார்கள்.

அதன் காரணமாக முப்படையினர் மற்றும் பொலிஸார் சுகாதாரப் பகுதியினரால் வடபகுதியில் இலகுவாக கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த கூடியதாகவுள்ளது.

எனினும் எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய வாரமாக காணப்படுகின்றது.

எனவே இரண்டு வாரங்களும் மக்கள் சுகாதார பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

அக் காலத்தில் நாட்டில் சில புதிய சுகாதார நடைமுறைகளை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதாவது மக்களை கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக மக்களை பாதிக்காதவாறு சில சுகாதார கட்டுப்பாடுகளை எடுக்க வுள்ளோம். அதற்காக அனைவரையும் தனிமைப்படுத்த மாட்டோம்.

குறிப்பாக தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எக்காரணம் கொண்டும் வீடுகளை விட்டு வெளியில் செல்லக்கூடாது. அவ்வாறு சென்றால் ஏனையவர்களுக்கும் கொரோனா இலகுவாகப் பரவும் அபாயமுண்டு.

எதிர்காலத்தில் நடமாடும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

வட்டுக்கோட்டையில் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்ட குளத்தை திறப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருக்கின்றேன்.

இந்தப் பிரதேச மக்களின் விவசாய தேவையினை பூர்த்தி செய்யக்கூடிய இந்த குளத்தினை இராணுவத்தினர் புனரமைத்துள்ளனர். அது இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விவசாய துறையை விருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணக்கருவுக்கு அமைவாக வடக்குப் பகுதியில் இராணுவத்தினரால் பல்வேறு விவசாய அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர்மேலும்தெரிவித்தார்.(5-33)

# தொழிலாளர் வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரசபையில் நிலவும் சுகாதாரத் தொழிலாளர்கள் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என நகர சபை உறுப்பினர் ம.நடன தேவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகர சபையில் சுகாதாரத் தொழிலாளர்கள் வெற்றிடம் நீண்ட காலமாக நிலவிவருகிறது. இருப்பினும் அதனை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

சுகாதாரத் தொழிலாளர்கள் வெற்றிடம் நிரப்பப்படும் போது வெளிவாரி அடிப்படையில் நகர சபையில் நீண்டகாலமாகப் பணியாற்றும் தொழிலாளர் களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவர்கள் 5 தொடக்கம் 10 வருடங்களாக சாவகச்சேரி நகர சபையில் வெளிவாரி சுகாதாரத் தொழிலாளர்களாக இருந்து வருகின்றனர். எனவே வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது சேவை அடிப்படையில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். (5-4-30)

# முதல் இடம்



(யாழ்ப்பாணம்)
தேசிய இலக்கிய விழா-2020 இனை முன்னிட்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் இணைந்து நடத்திய பிரதேச இலக்கியப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் நாடகப் பிரதியாக்கப் போட்டியில் பங்குபற்றிய யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி மாணவி செல்வி துஷாந்தினி கெங்காதரன் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (5)

# சம்பளத்தை உயர்த்தித் தருமாறு

## சுகாதார தொழிலாளர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகர சபையின் வெளிவாரி அடிப்படையிலான சுகாதாரத் தொழிலாளர்கள் சம்பளத்தை உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நகர சபை செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் தமது கோரிக்கைக் கடிதத்தில்,

கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை நகர சபையில் வெளிவாரி சுகாதார ஊழியர்களாக வெறுமனே 750 ரூபாய் நாளாந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களாக கடமையாற்றிவருகிறோம்.

நகராட்சி மன்றத்தின் நிரந்தர சுகாதார ஊழியர்கள் செய்யும் அனைத்து சேவைகளிலும் நாங்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகிறோம்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையில் 750 ரூபாய் என்ற தொகையில் எமது அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்ய முடியவில்லை.

எனவே எமது குடும்ப நிலைமை மற்றும் சேவை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி எமது சம்பளத்தினை உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என குறிப்பிட்டிருந்தனர். (5- 30)

# வீதிகள் அமைப்பதற்கு அனுமதி பெறப்பட வேண்டும்

(கரணவாய்)
பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய வீதிகள் அமைப்பதற்கு பிரதேச சபையின் அனுமதி பெற வேண்டுமென தவிசாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற வடமராட்சி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதற்கான அனுமதிக் கடிதம் மேலிடத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே, இனிவரும் காலங்களில் தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (5-4-60)

# யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்

## தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு -2020


பி.தக்சயன் 177


செ. ஷாளினி 177


கு. கம்சிகன் 175


வ.நிலக்சன் 174


ர.சர்விகன் 173


த.கிஷானி 170


செ.பிரகஷ்தன் 170


சு.ஷாருயன் 169


மு.கபிஷா 166


ஜெ.சைந்தவி 163


ஸ்ரீ.விதுரன் 163


யோ.லக்ஸ்மன் 161


ஜ.கபிலேஸ் 161


மெ.பி.பிரவீன் 161



எமது பாடசாலையில் இருந்து 63 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100% சித்தியடைந்துள்ளனர்.

எமது மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர் திரு.யோ. ஜெகஆனந்தம் அவர்களையும் ஆசிரியர்கள் திருமதி.சா.ஸ்ரீகுமார், திருமதி.டோ. கல்கி, திருமதி.ஜெ.விமலன் மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

ச.சபீனா-158, ஸ்ரீ.தரணிகன்- 157, மு.ஸ்ரீசங்கவி-155, ச.கம்ஷிகா-154, மு.சாங்கவி- 154, மு.ச.பாத்திமா சௌதா-153, நி.சரணியா- 151, நே.கஜப்பிரியன்- 150, லி.அபிஷனா- 149, ம.கார்த்திகன்- 146, ஜெ.ஜெகாசன்- 146, அ.சாத்வீகன்- 145, க.பிறீத்தி- 143, சி.டினேஸ்ராஸ்-142, ம.அஜந்தன்- 141, பி.அபிஷா- 140, பா. வினோஜா-139, சூ.சதுர்சனா- 138, வி.காவியாசினி- 136, த.அருரன்- 134, அ.தக்சயன்- 134, மோ. மேனகா-133, சி.கஜீபன்-131, செ.விஸ்ணுகுமரன்- 127, ரா.அஸ்வின்- 127, லி.கபீஷனா- 123, சு.கஜலக்சன்- 121, சி.கஜானன்- 120, ஹா-ஜனுஷியா- 120, உ.சௌமிஜா- 118, ச.அர்ச்சனா-117, பி.அனுஸ்கா- 116, சு.நிலக்ஷி-116, சு.அபினாத்- 115, வ.ஆகாஷ்-113, ஜெ.ஜனோசன்- 108, மோ.கோபிராம்- 107, மு.தனுசுயன்-106, செ.சஞ்சைய்-106, ஆ.சௌமியன்- 103, ம.ஜஸ்விதா- 101, ஈ.தனுசியன்- 100, ஜெ.ஜெசிந்தன்- 98, பி.ஜனார்த்தன்-97, வி.மைத்திரேஜி-94, ர.நிவிதா-90, ஜெ.நிருபன்-77

(4983) **வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்**

# எம்.சி.சி.ரத்துச் செய்யப்பட்டாலும் உதவிகள் தொடரும் - அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்துவது என எம்.சி.சியின் பணிப்பாளர் குழு தீர்மானித்துள்ள போதிலும் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

MCC ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைக்கு வழங்கப்படவிருந்த 480 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவை இரத்துச் செய்ய அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அதன்படி இந்த ஒப்பந்தத்தின் கீழ் பயன் பெறும் நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் இதனைத்தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இலங்கையின் நட்பு நாடாக தொடர்ந்தும் காணப்படும் என தெரிவித்துள்ள தூதரகம், இலங்கை கொரோனாவை எதிர்கொள்வதற்கும் நாட்டை கட்டியெழுப்புவதற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

# பொதுச் சுகாதார பரிசோதகர் வேஷம்; மயக்க மருந்து கொடுத்து கொள்ளையிட்ட கும்பல் சிக்கியது

(கொழும்பு)

பொது சுகாதார பரிசோதகர்களாக தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்கப் போவதாக தெரிவித்து, மஹவ பொலிஸ் பிரிவின் அம்பன்பொல - கெத்தப்பஹுவ பகுதியில் வீடொன்றில் சுமார் மூன்றரை பவுண் தங்கம் உள்ளிட்ட பொருட்களை கொள்ளையிட்டதாக கூறப்படும் கும்பல் சுமார் இரண்டரை மாதங்களுக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி இடம்பெற்றிருந்த இந்த கொள்ளை தொடர்பில் மஹவ பொலிஸாரும் நிக்கவரெட்டிய சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், குருநாகல் பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவினர் முன்னெடுத்த பிறிதொரு சம்பவம் தொடர்பிலான விசாரணைகளில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

34,36 வயதுகளை உடைய மினுவாங்கொட, உடுகம்பொல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரும் ஜாஎல பகுதியைச் சேர்ந்த 60, 37 வயதுகளை உடைய தாயும் மகளுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். சந்தேக நபர்கள் கைதாகும் போது அவர்களிடம் போதைப்பொருளும் இருந்ததாக குறிப்பிட்ட பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண அதனடிப்படையில் அவர்களுக்கு எதிராக விசேட தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாக கூறினார். (நி-4)

# புதிய அரசியலமைப்பில் தமிழர்களின் எண்ணங்களையும் உள்வாங்க வேண்டும்

## சிறீதரன்



(கிளிநொச்சி)

தமிழர்களின் எண்ணங்களையும் உள்வாங்கி புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் புதிய அரசியலமைப்பும் தமிழர்களின் முன்மொழிவும் எனும் தலைப்பில் இணையவழி மூலமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுவரை உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புக்கள் யாவும் தமிழர்களின் கருத்துக்களையும் உணர்வுகளையும் பிரதிபலிக்காது சிங்கள அரசியல் தலைவர்களின் எண்ணங்களுக்கும் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலுமே உருவாக்கப்பட்டிருக்கிறது.

சிங்களத் தலைவர்களால் முன்மொழியப்பட்ட தமிழர்களின் உரிமை சார்ந்த விடயங்கள்கூட உள்வாங்கப்படவில்லை.

அரசியல் அமைப்பிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதால்தான் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்.

தமிழ் தலைவர்களினதும் தமிழ் புத்திஜீவிகளினதும் தமிழ் மக்களினதும் கருத்துக்களை கேட்டு அறிய வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன், கலையரசன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5)

# ஆலயங்களுக்கு நிதி வழங்கி வைப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சியில் உள்ள 10 இந்து ஆலயங்களிற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

கோவில் புனரமைப்பு மற்றும் வளங்களை மேம்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதியிலிருந்து முதல் கட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அங்கஜன் இராமநாதனின் அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினரின் மாவட்ட இணைப்பாளர் ப.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (5-4-100)

# பேதமின்றி பணியாற்றுவேன் புதிய தவிசாளர்

(நெளுக்குளம்)

“எனக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை சரிவரப்பயன்படுத்தி கட்சி பேதமின்றி பணியாற்றுவேன்” என்று செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளர் சு. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தவிசாளராக தனது கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு கிடைத்திருக்கும் இந்த பதவி மூலம் கட்சி பேதமின்றி, செட்டிகுளம் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து கிராமங்களிற்கும் முறையில் சேவையாற்றுவேன்.

மக்களின் கருத்துக்களிற்கு மதிப்பளித்து முன்னுரிமை அளிப்பேன். மீதம் இருக்கின்ற குறுகிய காலப்பகுதிக்குள் சபையின் சட்டத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை நீதியான முறையில் செய்வதற்கு முயற்சிகளை எடுப்பேன் என்றும் இதேவேளை சபையை நல்லமுறையில் நடத்திச்செல்வதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (5-4-299)

# மீன் குஞ்சுகள் வெளியேறாமல் வலையமைக்கும் பணி ஆரம்பம்

(முறிகண்டி)

இரணைமடு குளத்திலிருந்து மீன்குஞ்சுகள் வெளியேறாமல் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு வலைகள் அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நேற்று இரணைமடு மீனவர் தொழில் வாடியில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு பணியை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் குளத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பிலும் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வலையினை மேலும் அதிகரித்தல் மற்றும் தொழில் சார் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை பற்றியும் அமைச்சரிடம் மீனவர்கள் தெரிவித்தனர். இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

குறித்த தேவைகளை அடுத்துவரும் மாதங்களில் தீர்த்து வைக்கப்படும் என தெரிவித்தார்.

அத்துடன் குறித்த தொழில் புரியும் பகுதிக்கு செல்லும் வீதி, மீனவர்களிற்கான தொழில் உபகரணங்கள், மீன்குஞ்சுகளை வெளியேறாது பாதுகாப்பதற்கான கட்டமைப்பை மேம்படுத்தல், நன்னீர் மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கான திட்டம், இரணைமடு குளத்தில் உள்ள வளங்களை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வழிகாட்டலில் முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்.மாவட்ட நன்னீர் நீர் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர் சங்கீதன், வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர், மீனவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (5-4-100)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கியின் கணனி மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவையின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. கரைச்சி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி மாதுகி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

# பாதீடு வெற்றி

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையில் 2021 ஆண்டுக்கான வரவு செலவு திட்டமானது கடும் சர்ச்சைகளுக்கு மத்தியில் நேற்று மன்னார் பிரதேச சபை தவிசாளர் முஜாஹிர் தலைமையில் சபையில் முன் வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வாத பிரதி வாதங்களை தொடர்ந்து வரவு-செலவுத் திட்டமானது வாக்களிப்புக்கு விடப்பட்டது.

இந்நிலையில் ஒரு மேலதிக வாக்கைப் பெற்று 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டமானது அங்கீகரிக்கப்பட்டது. (5-4-285)

# மொத்த விற்பனை நிலையத்தில் எவருக்கும் தொற்றில்லை

(நெளுக்குளம்)

வவுனியா மரக்கறி மொத்த விற்பனை சந்தையில் இருவருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டுள்ளதாக வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என வவுனியா மாவட்ட விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் நந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள மரக்கறி மொத்த விற்பனை நிலையத்தில் நேற்றுக்காலை இருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதாக தெரிவிக்கப்படும் செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலையில் மரக்கறி சந்தைக்கு வருபவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட உடல் வெப்ப பரிசோதனையின் போது சந்தைத் தொகுதியில் வர்த்தக நிலையத்தினை வைத்துள்ள இருவருக்கு வெப்பம் அதிகமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அவர்களை நாம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி மீண்டும் உடல் வெப்ப நிலையைப் பரிசோதித்த போது சாதாரண வெப்பநிலையே பதிவாகியிருந்தமை எமக்கு தெரியப்படுத்தப்பட்டது.

அதன்பின்னர் அவர்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

எனவே வதந்திகளை நம்பி அன்றாடம் தமது வாழ்வாதாரத்தினை மேற்கொள்ளும் விவசாயிகள் தமது பொருட்களை சந்தைக்கு கொண்டு வருவதனை நிறுத்த தேவையில்லை என தெரிவித்ததுடன் தமது உற்பத்திப் பொருட்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சந்தையில் விற்பனை செய்ய வருமாறும் அவர் தெரிவித்தார். (5-4-299)

# இராசிபலன்

18.12.2020
மார்கழி 03, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி மாலை 6.08 மணிவரை
திருவோணம் முன்னிரவு 10.59 மணிவரை
சுபநேரம் 6.23 - 7.53 மணிவரை
இராகுகாலம் 10.53 - 12.23 மணிவரை
சந்திராஷ்டமம்:- திருவாதிரை, புனர்பூசம்
சதுர்த்தி விரதம். வளவன்


மேஷம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றமுண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், திடீக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


மிதுனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் மேலோங்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை.


கடகம்

நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


சிம்மம்

தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


கன்னி

மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வளர்ச்சி கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.


தனுசு

நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.


மகரம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.


கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

துன்பம் ஒருவனை செல்வனாக்காவிடினும் அறிவாளியாக்கும்.

# மதுபோதையில் வாகனம் செலுத்தினால்
# சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும்

**(கொழும்பு)**

**கவனக்குறைப்பாடு, அதிகவேகம் மற்றும் மது போதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

அநுராதபுரம் - பாதனிய பிரதான வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்றரை வயதுடைய ஆண் பிள்ளை ஒன்றும் அவரது தாயும் உயிரிழந்துள்ளனர்.

இதன்போது தனது பிள்ளையுடன்பாதையை கடந்து சென்று கொண்டிருந்த பெண்மீது சாரதி உட்பட 11 பேர் பயணித்த கப் ரக வாகனம் மோதிச் சென்றுள்ளது.

விபத்து தொடர்பில் கப் வாகனத்தில் பயணித்த 11 பேரில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சாரதியும் இன்னும் இரு நபர்களும் தலைமறைவாகியுள்ளனர்.

இதன்போது குறித்த கப் வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் அதிலிருந்து வெற்று பியர் போத்தல்களையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை அண்மையில் மொரட்டுவ பகுதியிலும் இதேபோன்ற விபத்தொன்று



இடம்பெற்றிருந்தது. இதன்போது இரு சிறு பிள்ளைகள் உயிரிழந்ததுடன் அவர்களது தாயார் படுகாயமடைந்திருந்தார்.

ஆகவே அதிகளவான வாகன விபத்துகள் சாரதிகளின் கவனக் குறைப்பாட்டின் காரணமாகவே இடம்பெறுகின்றன. இதற்கு அதிகவேகமும் மதுபோதையும் பிரதான காரணமாக காணப்படுகின்றது. அதனால் சாரதிகள் இவ்வாறு விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்நிலையில் போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் இவ்வாறான சாரதிகள் தொடர்பில் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோல் பொதுப் போக்குவரத்து வாகனங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் சிவில் உடையில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதன்போது மேற்படி குற்றங்களின் பேரில் கைது செய்யப்படும் சாரதிகளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தி அவர்களது சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்காக நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொள்ளவும் பொலிஸார் எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (நி-4)

# நாடு திரும்பிய இருவருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

வியட்நாம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் சுற்றுலா ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை அவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பன்னிப்பிட்டி மற்றும் பெலவத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவர்கள் இருவரும் கடந்த 4 ஆம் திகதி நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்காக சிலாபம் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற நிலையிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மேலும் 42 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 42 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி கட்டாரிலிருந்து 42 பேர் நேற்று வியாழக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் அவர்கள் அனைவரும் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.(நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இழப்பீடு வழங்க ஆராய்வு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரிய இழப்பீடு வழங்குவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோருக்கிடையில் இது குறித்து சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் தேவாலயங்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நன்றி தெரிவித்ததாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# நிலவில் இருந்து பூமிக்கு வந்தடைந்தது சீன விண்கலம்



(பீஜிங்)

சீனாவில் இருந்து நிலவுக்கு அனுப்பப்பட்ட விண்கலம் நிலவில் எடுக்கப்பட்ட பாறைகளுடன் பூமியை வந்தடைந்தது.

நிலவில் இருந்து கற்கள், பாறைகளை பூமிக்கு எடுத்து வந்து ஆய்வு செய்வதற்காக சீனாவில் இருந்து கடந்த மாதம் 24 ஆம் திகதி ஒரு விண் கலத்தை அனுப்பியது.

'சேஞ்ச்-5' என்ற அந்த ஆளில்லா விண்கலம் இந்த மாதம் முதலாம் திகதி நிலவில் பாதுகாப்பாக தரை இறங்கியது. அங்கு திட்டமிட்டபடி கற்கள், பாறைகள் போன்றவற்றை சேகரித்தது.

அதன்பின்னர் கடந்த 3 ஆம் திகதி அந்த விண்கலம் நிலவு பரப்பில் இருந்து புறப்பட்டது. இது நிலவை சுற்றிக் கொண்டிருந்த ரொக்கெட் விண்கலத்துடன் கடந்த வாரம் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது.


அந்த விண்கலத்தில் இருந்த 4 என்ஜின்கள் 22 நிமிடங்கள் இயக்கப்பட்டன. இதையடுத்து நிலவில் எடுக்கப்பட்ட பாறை, கற்களுடன் கடந்த 14 ஆம் திகதி விண்கலம் பூமியை நோக்கி திருப்பப்பட்டது.

இந்த நிலையில், பூமியை நோக்கி தனது பயணத்தை தொடங்கிய 'சேஞ்ச்-5' விண்கலம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் சீனாவின் இன்னர் மங்கோலியா மாகாணம் சிசிவாங்க் மாவட்டத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

இதையடுத்து, அந்த விண்கலத்தில் கொண்டுவரப்பட்ட நிலவின் பாறை, கல் துகள்களை சேகரித்த சீன விண்வெளி விஞ்ஞானிகள் அதை ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் நிலவுக்கு விண்கலத்தை அனுப்பி அங்கிருந்து பாறைகள், மணல்போன்றவற்றை பூமிக்கு கொண்டு வந்து ஆய்வு செய்தன. அதற்கு பின்னர் 45 ஆண்டுகளுக்கு பிறகு நிலவில் இருந்து பாறை மற்றும்மணல்துகள்களை கொண்டு வந்த 3 ஆவது நாடு என்ற பெருமையை சீனா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-4)

# உலகில் புலம்பெயர்ந்தோருக்கு ஆதரவான நாடுகள் பட்டியலில் முன்னணியில் கனடா



(ஒட்டாவா)

உலகில் புலம்பெயர்ந்தோருக்கு ஆதரவான நாடுகளின் பட்டியலில் கனடா தொடர்ந்தும் முன்னணில் உள்ளதாக சர்வதேச திங் ராங்ஸ் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம் பேசும் நாடுகளில் புலம்பெயர்ந்தவர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் நட்புறவான புலம்பெயர்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாடாக கனடா உள்ளது என திங் ராங்ஸ் இடப்பெயர்வு கொள்கைக் குழுவின் ஆராய்ச்சி இயக்குநர் தோமஸ் ஹட்ல்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்து நாட்டுக்குள் வரும் புதியவர்களுக்கு சம உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பை அளிக்கும் புலம்பெயர்ந்தோருடன் நட்பு கொள்கைகளைப் பேணும் நாடுகள் பட்டியலில் உலகில் நான்காவது இடத்தை கனடா பிடித்துள்ளது.

பிரதமராக ஸ்ரீபன் ஹார்ப்பர் தலைமையில் கனடா கன்சர்வேடிவ் கட்சி ஆட்சியில் இருந்த போது 2015 இல் வெளியான புலம்பெயர்ந்தோருக்கு நட்புறவான மிப்பெக்ஸ் தரவரிசையில் கனடா ஆறாவது இடத்தில் இருந்தது.

எனினும் 2015 முதல் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமையில் கனடாவின் லிபரல் கட்சியின் ஆட்சிக் காலங்களில் புகலிடம் கோருவோருக்கான சலுகைகள் கனடாவில் மேம்பட்டுள்ளன. சுகாதார அணுகல் மற்றும் 2017 குடியுரிமைச் சட்டத்தின் திருத்தங்கள் இவ்வற்றில் முக்கியமானவையாகும்.

கனடாவின் மிகப் பெரிய பலம் அதன் பாகுபாடுகளுக்கு எதிரான கொள்கைகளில் உள்ளதாக திங் ராங்ஸ் தெரிவித்துள்ளது. கனடாவின் சம உரிமைக் கொள்கை, பல்கலாசாரப் பண்பு உள்ளிட்டவற்றால் புலம்பெயர்ந்தவர்களுக்கான நட்புறவுச் செயற்பாட்டில் அந்நாடு அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளது.

கனடாவில் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் குடியுரிமையைப் பெறுவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளனர். இதனால் புலம்பெயர்ந்தோர் குடியுரிமை பெற்று வாக்களிக்கும் உரிமையை ஒப்பீட்டளவில் கனடாவில் விரைவாகப் பெறக் கூடியதாக உள்ளது.

இடம்பெயர்வு கொள்கைக் குழு மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான பார்சிலோனா மையம் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட இந்த அண்மைய மிப்பெக்ஸ் குறியீட்டு அறிக்கை, 2019 இல் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள்கவனிந்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# சதித்திட்டம் தீட்டியவருக்கு 7 வருட சிறைத்தண்டனை

(டில்லி)


இந்தியாவில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த நசீர் என்பவருக்கு ஏழு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து டில்லி நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில், குற்றச் சதி, பயங்கரவாதச் செயலில் ஈடுபட சதித்திட்டம் தீட்டியமை, பயங்கரவாதச் செயலுக்கு ஆட்சேர்ப்பு, பயங்கரவாத அமைப்பில் உறுப்பினராக இருப்பது, பயங்கரவாத அமைப்பை ஆதரிப்பது ஆகிய சட்டப் பிரிவுகளின் கீழ் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த முகம்மது நசீரை தேசியப் புலனாய்வு முகமை பொலிஸார் கைது செய்து அவர் மீது வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

அத்துடன் நசீரிடம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏனையவர்களை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கடத்தப்பட்ட மாணவர்களில் இருவர் பலி,17 பேர் மீட்பு



(நைஜர்)

வடமேற்கு நைஜீரியாவில் உள்ள ஒரு பாடசாலையிலிருந்து போகோஹராம் ஆயுதக் குழுவால் கடத்தப்பட்ட 17 மாணவர்கள் மீட்கப்பட்டனர்.

அத்துடன் இந்த மீட்பு நடவடிக்கையின் போது இருவர் உயிரிழந்துள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடமேற்கு நைஜீரியாவில் உள்ள ஒரு பாடசாலையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் போகோஹராம் ஆயுதக் குழுவால் கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)


# தனிமைப்படுத்திக் கொண்டார் மைக்பொம்பியோ



(வோஷிங்டன்)

தன்னுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக்பொம்பியோ தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார். (நி-4)

# ஒரு வாரத்தில் போடப்பட்ட தடுப்பூசி எண்ணிக்கையை வெளியிட்டது இங்கிலாந்து



(லண்டன்)

இங்கிலாந்தில் பைசர் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி டிசெம்பர் 8 ஆம் திகதி முதல் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

முதல்கட்டமாகக் கொரோனாத் தடுப்பு பணியில் உள்ள மருத்துவ ஊழியர்களுக்கு, வயதானோருக்கும் தடுப்பூசி செலுத்துவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதல் வாரத்தில் எத்தனை பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்ற தகவலை இங்கிலாந்து சுகாதாரத்துறை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அந்த தகவலின்படி இங்கிலாந்தில் டிசெம்பர் 8 ஆம் திகதி முதல் டிசெம்பர் 16 வரை 7 நாட்களில் மொத்தம் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் பேருக்கு பைசர் நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தடுப்பூசியின் முதல் டோஸ் தற்போது போடப்பட்டுள்ளவர்கள் தடுப்பூசியின் 2 ஆவது டோஸ்-ஐ 21 நாட்களுக்கு பின்னர் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2020-15.01.2021

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்






சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரது பார்வை தன் வீடான உங்கள் இராசியிலேயே பதிவது யோகம்தான். மேலும் சனி - குரு பரிவர்த்தனையும், செவ்வாய் லாப ஸ்தானத்தில் சொந்த வீடான மேஷத்தில் சஞ்சரிக்கும் அமைப்பும் இருப்பதால், பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள்.

### ராகு-கேதுக்களின் ஆதிக்கம்

சர்ப்பக் கிரகங்களான ராகு 12 ஆம் இடத்திலும், கேது 6 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கின்றனர். உங்கள் இராசிநாதன் புதன், பரிவர்த்தனை யோகம் பெற்ற சனியோடு இணைந்து சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கத்திற்குள் இருக்கின்றார். அவரோடு சகாய ஸ்தானாதிபதி சூரியனும் இருக்கின்றார். எனவே பயணங்கள் அதிகரிக்கும். பணப்பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வருவதில் சிக்கல்கள் ஏற்படலாம். 'தொழிலில் பங்குதாரர்களை புதிதாகச் சேர்க்கலாமா?' என்ற எண்ணம் மேலோங்கும்.

### மகரச் சனி சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26 ஆம் திகதி 8 ஆம் இடத்திற்கு செல்கின்றார். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் தொடங்கிவிட்டது. இனி கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. மற்ற இராசிகளைக் காட்டிலும் உங்கள் இராசிக்கு அஷ்டமத்துச் சனி அவ்வளவு கெடுபலன்களைக் கொடுக்காது. காரணம் அஷ்டமாதிபதியாக சனி விளங்குகின்றார். எனவே தன் சொந்த வீட்டில் சனி சஞ்சரிக்கும் பொழுது கெடுபலன்கள் குறைவாகவே இருக்கும். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகலாம். இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள், வீடு மாற்றங்கள் ஒரு சிலருக்கு வரலாம்.

### மகர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அதிபதியான புதன், 4 ஆம் இடத்திற்கும் அதிபதியாவார். அவர் டிசெம்பர் 30 ஆம் திகதி மகர இராசிக்கு வருகின்றார். அஷ்டமத்திற்கு வரும் புதன் நன்மைகளையே உங்களுக்கு வழங்குவார். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். மகரத்தில் உள்ள குருவோடு புதன் இணைவதால் சுபகாரியங்கள் நிகழ்வதற்கு வாய்ப்பு உண்டு.

### தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி 5 ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கின்றார். அப்பொழுது அவர் பார்வை உங்கள் இராசியின் மீது பதிகின்றது. புத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியானவரின் பார்வை உங்கள் இராசியில் பதியும் பொழுது பிள்ளைகளால் விரயம் ஏற்படும்.

குறிப்பாக பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ அல்லது கல்யாணம் போன்ற சுப நிகழ்வுகள் சம்பந்தமாகவோ எடுத்த முயற்சிகள் வெற்றிபெறும்.

இம்மாதம் புதன்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

## தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள்






சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிக்கு ஏழாமிடத்தில் குரு பகவான் அமர்ந்து உங்கள் இராசியைப் பார்க்கின்றார். அவரது அருட்பார்வை உங்கள் இராசியில் பதிவதால் நிதானத்தோடு செயற்பட்டு நிம்மதி காண்பீர்கள். செயலில் வெற்றி கிடைக்கும். செல்வ வளம் திருப்தி தரும். சுபகாரியங்களுக்காக செலவிட்டு மகிழ்ச்சி காண்பீர்கள்.

### ராகு-கேதுக்களின் ஆதிக்கம்

இம்மாதம் சர்ப்பக் கிரகங்களான ராகு 11 ஆம் இடத்திலும், கேது பூர்வ புண்ணிய ஸ்தானத்திலும் சஞ்சரிக்கின்றார்கள். கேதுவோடு இணைந்த சுக்கிரன், தனது சொந்த வீடான லாப ஸ்தானத்தைப் பார்க்கின்றார். எனவே நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். மக்கள் செல்வங்களின் முன்னேற்றம் கருதி எடுத்த புது முயற்சிகளில் திருப்தி ஏற்படும். வெளிநாட்டிலிருந்து சொந்த ஊருக்கு வர முடியாதவர்களுக்கோ, அல்லது சொந்த ஊரில் இருந்து வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கோ நல்ல தகவல் வரலாம். இளைய சகோதரத்தோடு இருந்த விரிசல்கள் அகலும்.

### மகரச் சனி சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26 ஆம் திகதி சப்தம ஸ்தானத்திற்கு வருகிறார். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். காரணம் மகரத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் அங்குள்ள குரு பகவானோடு இணைந்திருக்கப் போகின்றார். 'குரு பார்த்தாலும் தோஷ நிவர்த்தி, குரு சேர்ந்தாலும் தோஷ நிவர்த்தி' என்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. இல்லத்திற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் சஞ்சலங்கள் தீர வழி பிறக்கும்.

### மகர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், டிசெம்பர் 30 ஆம் திகதி சப்தம ஸ்தானத்திற்கு வருகின்றார். சகோதர ஸ்தானம் மற்றும் விரயஸ்தானத்திற்கு அதிபதியானவர் 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புகளின் திருமணங்கள் நடக்க ஏற்பாடு செய்வீர்கள்.

அதன் மூலம் சுபவிரயங்களும், ஏற்படும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். வழக்குகள் சாதகமாக அமையும். இடமாற்றங்களையும், வீடு மாற்றங்களையும் எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது தானாக அமையும்.

### தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி 5 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். சுக லாபாதிபதி 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும், முன்னேற்றமும் கிடைக்கும். சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும்.

அரசு வேலையை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அதுவும் கைகூடுவதற்கான வாய்ப்பு உண்டு. அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கல்வி முன்னேற்றம் கருதியும், நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி தரும்.

இம்மாதம் பௌர்ணமிதோறும் விரதமிருந்து மால்மருகனை வழிபடுவது நல்லது.

## செல்வ வளம் திருப்தி தரும்

(தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல் இறுதி முடிவு அடுத்த வாரம்



(கொழும்பு)

தேர்தல் கட்டமைப்பில் மாகாண சபை தேர்தல் அவசியமாகும். மாகாண சபை தேர்தல் குறித்து உறுதியான தீர்மானம் அடுத்த வாரம் அறிவிக்கப்படும். மாகாண சபைகளில் உள்ள குறைபாடுகள்தீர்க்கப்பட்டு மாகாண சபை முறைமை பலப்படுத்தப்படும் என தேசிய மரபுரிமை மற்றும் கிராமிய கலை, கலாசார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபை தேர்தலை உரிய காலத்தில் நடத்தியிருந்தால் தற்போது மாகாணசபை தேர்தல் குறித்து முரண்பட்ட நிலை தோற்றம் பெற்றிருக்காது.

மாகாணசபை தேர்தல் குறித்து எதிர்வரும் வாரம் உறுதியான தீர்மானம் அறிவிக்கப்படும். மாகாண சபை தேர்தலை எத்தேர்தல் முறையிலாவது விரைவில் நடத்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அரசியல் காரணிகளுக்காகவே மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டது. மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்படும். பொதுஜன பெரமுன மாகாண சபைத் தேர்தலிலும் அமோக வெற்றி பெறும் .

திட்டமிட்ட வகையில் தொல்பொருள் சின்னாங்களை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தொல்பொருள் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை தற்போதைய சூழ்நிலைக்கு அமைய திருத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# ஜனாஸாக்களை மாலைதீவில் அடக்கம் செய்வது முஸ்லிம் மக்கள் விலக்கப்பட வழிவகுக்கும்

## ஐ.நா. கவலை



**(ஜெனீவா) கொரோனாவினால் உயிரிழந்த இலங்கை முஸ்லிம்களின் உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்வது இலங்கையில் முஸ்லிம் சமூகம் மேலும் விலக்கிவைக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என மத நம்பிக்கைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் அஹ்மெட் சஹீட் தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு மாலைதீவின் பதில் ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது என ஐ.நா.நிபுணர் தெரிவித்துள்ளார்.

இந்த வேண்டுகோள் முஸ்லிம் சமூகத்திடமிருந்தோ அல்லது அவர்களின் சம்மதத்துடனோ வெளியாகவில்லை போல தோன்றுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இலங்கையில் முஸ்லிம் சமூகம் மேலும் ஒதுக்கிவைக்கப்படும் நிலை உருவாகலாம் என குறிப்பிட்டுள்ள அவர், உலக சுகாதார ஸ்தாபனம் தனது வழிகாட்டுதல்களில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் அல்லது தகனம் செய்யலாம் என தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# திருட்டில் ஈடுபட்டு வந்த இலங்கையர்கள் கனடாவில் கைது

(ரொரண்டோ)

ரொரண்டோவில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கைது செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் மற்றும் அவர்கள் செய்த குற்றங்களையும் ரொரண்டோ பொலிஸார் வெளியிட்டுள்ளனர். (நி-4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2185

**சுமணன்**


சேர்! தயவு செய்து வெளியில் வருகிறீர்களா?



இருங்க டாக்டர்...நான் Status போடுறன். கண்டிப்பாக வெளியில் வருகிறேன்.

**கபிஸ்ணவி**


இந்த உலகத்தில நல்லவங்கள் எங்க தேடினாலும் கிடைக்க மாட்டாங்க.



ஏன்னா? நான் வீட்டில இருக்கேன்.

**அனுஷா**


மார்கழி மாசம் தானே இது...



வாயில அடி வாயில அடி ஏழைகளின் Ac மாதம்னு சொல்லுங்க...

**நிலக்ஷன்**

அண்ணே திடீர்னு நான் வெள்ளை ஆயிட்டேன்



டேய் அது வெள்ளை இல்ல மார்கழி மாசம் வந்தாலே உடம்பெல்லாம் வெள்ளையா சொறி பிடிக்கும்.

**சவுந்தர்யன்**

நாம கஷ்டப்பட்டு படிச்சு வேலைக்கு போய் செட்டில் ஆவோமாம்...!



நோகாமல் இவளுக நம்மள கட்டிக்கிட்டு வந்து வீட்டில சொகுசா இருப்பாளுகளாம்...!

**சாமி**

இனி ஜென்மத்துக்கும் திரும்ப போகக்கூடாதுன்னு நினைச்சாலும் ரோசம் கெட்டுப்போற இடம்...



ஒன்று மாமியார் வீடு... இன்னொன்னு பேஸ்புக்கு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உயர்நீதிமன்ற தீ விவகாரம்

## வெளிப்படையான விசாரணை அவசியம்

## ஐ.தே.க. வலியுறுத்து

**(கொழும்பு)**

**உயர்நீதிமன்றக் கட்டடமே எமது நாட்டு நீதித்துறையின் உச்சம் என்பதுடன் அது உயர் பாதுகாப்புள்ள பகுதியிலேயே அமைந்திருக்கின்றது. அவ்வாறான கட்டடமொன்றில் தீப் பரவல் ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் அரசாங்கம் விரைவானதும் வெளிப்படைத்தன்மையானதுமான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியிருக்கிறது.**

கொழும்பு புதுக்கடை பகுதியில் அமைந்துள்ள உயர்நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று மாலை திடீரென தீ பரவியது.

இந்தத் தீப்பரவல் உயர்நீதிமன்றத்தின் வழக்குக் கோவைகள் வைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அறிவித்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

கொழும்பில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தற்போது முடக்கப்பட்டிருக்கும் பகுதியிலேயே உயர் நீதிமன்றம் அமைந்திருக்கின்றது.

அங்கு மிகமுக்கிய வழக்குகள் தவிர்ந்த ஏனைய நீதிமன்ற நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. நீதிமன்றத்தில் பழைய பொருட்கள் அல்லது கழிவுகள் வைக்கப்பட்டிருந்த பகுதியிலேயே தீப்பரவல் ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

அதே இடத்திலிருந்த ஆவணங்கள் மற்றும் கோப்புகள் வைக்கப்பட்டிருந்த பகுதிக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் எந்தவொரு கோப்புகளும் காணாமல்போகவில்லை என்பதை உறுதிசெய்வதற்கான முழுமையான மதிப்பீடொன்று செய்யப்பட வேண்டும்.

அதேபோன்று அந்தக் கட்டடத்தின் பாதுகாவலர்களும் பொறுப்புக்கூறச் செய்யப்பட வேண்டும். 2019 இற்கு முன்னர் எமது அரசாங்கம் நீதிமன்ற கோப்புகளை கணனியில் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதனை அமுல்படுத்துவது மாத்திரமே நிலுவையில் இருந்தது.

அந்தத் திட்டத்தைத் தற்போதைய அரசாங்கம் செயற்படுத்துகின்றதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறோம். அவ்வாறு செயற்படுத்தவில்லையெனின் அதற்கான காரணத்தையும் கூற வேண்டும்.(நி-4)

# மேலும் 10 இடங்கள் முடக்கம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் மேலும் சில பகுதிகள் நேற்று (வியாழக்கிழமை) காலை 6 மணி முதல் முடக்கப்படுவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



இதற்கமைய அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளும் மொனராகலை மாவட்டத்தின் கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதாவது, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் மூன்று பிரதேசங்களும், அட்டாளைச்சேனை பொலிஸ் பிரிவில் மூன்று பிரதேசங்களும், ஆலையடிவேம்பு பொலிஸ் பிரிவில் மூன்று பிரதேசங்களும் முடக்கப்பட்டுள்ளன என இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை மொனராகலை மாவட்டத்தின் அலுபொத கிராம உத்தியோகத்தர் பிரிவும் முடக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் 95ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட 'தேசிய ஒலிபரப்பாளர்' நூல், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

1925ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி, பிரித்தானிய ஆளுநர் ஹியூ கிளிஃபர்ட்டின் தலைமையில் இலங்கையின் வானொலி சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது தொலைத்தொடர்பு துறையின் கீழ் இருந்தது.

1949ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி இந்த வானொலி சேவை றேடியோ சிலோன் என்ற பெயரில் புதிய துறையாக மறுசீரமைக்கப்பட்டது. அதன் முதலாவது பணிப்பாளர் ஜோன் ஏ.லம்சான் ஆவார். 1967 ஜனவரி 5ஆம் திகதி இலங்கை ஒலிபரப்புத் துறை, கூட்டுத்தாபனமாக மீண்டும் மறுசீரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அசைவுகளும் அர்த்தங்களும்!

ஒரு ஆள் இருந்தார். அவர் தன்னை ஒரு குரு என்று சொல்லிக் கொண்டார். மௌனகுரு. வாயே திறப்பதில்லை. அவருக்கு இரண்டு சீடர்கள் உண்டு. இவர்கள் தான் வருபவர்களிடம் பேசுவார்கள். விளக்கம் கொடுப்பார்கள்.

ஒருநாள் இந்த சீடர்கள் இரண்டு பேரும் எங்கேயோ வெளியிலே போய்விட்டார்கள். அந்த நேரம் பார்த்து ஒருவர் அங்கு வந்தார்.குருவிடம் போனார்.குருவே! புத்தர் என்றால் என்ன? என்று கேட்டார்.

குருவுக்கு ஒன்றுமே புரியவில்லை..அவர் உண்மையான குருவாக இருந்தால் அல்லவா புரியும்? திரு திரு என்று முழித்தார்.இந்த நேரம் பார்த்து இந்த சீடர்களும் எங்கேயோ போய்விட்டார்களே..என்ன செய்வது? உதவிக்கு யாராவது கிடைக்க மாட்டார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தார்.

வந்தவர் இதை கவனித்தார். ஏதோ புரிந்து கொண்டவர் மாதிரி அடுத்த கேள்வியைக் கேட்டார்.தர்மம் என்றால் என்ன சுவாமி ? என்றார்.குருவுக்கு மிகவும் சங்கடமாகப் போய் விட்டது. எங்கள் நிலைமை இப்படி ஆகிவிட்டதே. இக்கட்டிலே மாட்டிக் கொண்டோமே என்று நினைத்தபடியே விட்டத்தைப் பார்த்தார். அதன்பின்பு குனிந்து தரையைப் பார்த்தார். அப்படியே உட்கார்ந்து விட்டார்.வந்தவர் உடனே அடுத்த கேள்விக்குப் போய்விட்டார். தியானம் என்றால் என்ன என்றார். பாவம் என்ன செய்வார் அந்த குரு பேசாமல் கண்ணை கெட்டியா மூடிக் கொண்டார். இது ஏதுடா வம்பாய் போய்விட்டது என்று.

இவர் இப்படி செய்தது கூட வந்தவர் சளைக்காமல் இன்னொரு கேள்வியும் கேட்டார். ஆசீர்வாதம் என்றால் என்ன என்றார்.இவர் பார்த்தார். இப்படியே போனால் இவர் கேள்வி கேட்பதை நிறுத்த மாட்டார் என்று நினைத்துக் கொண்டு.. எனக்கு ஒன்றுமே தெரியாது என்பதை பாவனை யிலே இரண்டு கையையும் விரித்து காட்டினார்.

வந்தவர் முகத்திலே மகிழ்ச்சி .மன நிறைவு .ஏதோ எல்லாம் புரிந்து கொண்டவர் மாதிரி அங்கேயிருந்து புறப்பட்டுப் போனார்.

வழியில் அந்த குருவோட சீடர்கள் இரண்டு பேரையும் சந்தித்தார். உங்கள் குருவை தான் பார்த்துவிட்டு வருகின்றேன்..என்றார்.என்ன நடந்தது?என்று கேட்டார்கள்.இவர் விபரமாகச் சொன்னார்.உங்கள் குரு எவ்வளவு பெரிய ஞானி தெரியுமா?புத்தர் என்றால் என்ன என்று கேட்டேன். அதற்கு அவர் அப்படியும் இப்படியும் பார்த்தார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? மக்கள் புத்தரை அங்கும் இங்கும் தேடுகின்றார்கள். உண்மையில் அவரை அங்கேயும் இங்கேயும் தேடிக் கண்டு பிடிக்க முடியாது என்பதை அவர் செய்கை மூலம் உணர்த்தினார்.

அதற்கு பின்பு தர்மம் என்றால் என்ன என்று கேட்டேன். அவர் மேலேயும் கீழேயும் பார்த்து தர்மம் சமமானது..அதிலே உயர்வு தாழ்வு இல்லை..என்பதை உணர்த்தினார்.

அதற்குப் பின்பு தியானம் என்றால் என்ன என்று கேட்டேன். கண்ணை மூடிக் கொண்டார். கண்ணை மூடிக்காணும் அற்புதம் அது என்பதைப் புரிந்து கொண்டேன்.

கடைசியாக ஆசீர்வதிக்கப்படுவது பற்றிக் கேட்டேன். கைகள் நீட்டி உதவுவது தான் அது என்பதை இரு கை விரித்து உணர்த்தினார்.

எவ்வளவு பெரிய மகான் அவர்? என்று சொல்லிவிட்டு அவர் பாட்டுக்குப் போய்விட்டார்.

சீடர்கள் அதற்குப் பின்பு மெதுவாக குருவிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் குருவுக்குக் கோபம் வந்து விட்டது.அடேய் பாவிகளா? எங்கேடா போய்த் தொலைஞ்சீங்க? நான் ஒரு ஆளிடம் மாட்டிக்கொண்டு என்ன பாடுபட்டிருக்கேன் தெரியுமா? என்றார்.இது மாதிரி தான் நாம் சாதாரண மனிதர்களின் புற வேடங்களிலேயே மயங்கிப் போய்விடுகின்றோம். அவர்கள் பேச்சு செய்கை-பார்வை-இதிலேயெல்லாம் ஏதோ பெரிய தத்துவம் இருக்கிறதாக நினைத்துக் கொண்டிருக்கின் றோம்.

உண்மையிலே அந்தத் தத்துவங்கள் யாருக்குச் சொந்தம்.. அவர்களுக்கு இல்லை. நமக்குத் தான் சொந்தம் நான் தானே அதை கற்பித்தோம்.நம்மை நாம் அடையாளம் கண்டு கொள்வதில்லை.நாம் யார் என்பது நமக்குப் புரிவதில்லை.அது தான் இன்றைக்கும் நடக்கின்றது. அதனால் தான் அடுத்தவர்களை தேடி ஓடிக் கொண்டிருக்கின்றோம்.

சில வீடுகளிலே கூட இது மாதிரி சைகைகள் உண்டு.சில குடும்பத் தலைவர்கள் தினமும் காலையில் கண்ணை கெட்டியாக மூடிக்கொண்டு கை இரண்டையும் சுத்தமாக விரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து தியானம் செய்வது வழக்கம்.எதற்காக அப்படி செய்தீர்கள் என்று ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். இந்த மாதம் வாங்கிய சம்பளம் பூரா தீர்ந்து போய் விட்டது. இனிமேல் என் கையிலே சுத்தமாக ஒன்றுமே இல்லை புதிதாக எதுவும் செலவு வைத்துவிடாதே என்பதை அப்படி உள்ளங்கை இரண்டையும் விரித்துக் காட்டி அவர்களுக்கு உணர்த்துகின்றேன் என்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

22

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 70.**

ஒரு சட்டமூலத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவொன்றின் அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் நியமிக்கும் ஒரு நாளில் அவ்வறிக்கை பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படல் வேண்டும். ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவின், சட்டவாக்க நிலையியற் குழுவின் அல்லது விசேட குழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்படும்போது குழுவால் அச்சட்டமூலத்தில் திருத்தங்கள் எதுவும் செய்யப்பட்டிருந்தால் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும் திருத்தங்களை மட்டுமே பரிசீலிக்கும். ஆயினும் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம்.

அறிக்கையைப் பரிசீலிக்கும்போது, குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக முன்வைக்கப்பட்டவை தவிர, பாராளுமன்றத்தால் புதிய திருத்தங்கள் எதையும் செய்ய முடியாது. ஆனால், குழுவால் செய்யப்பட்ட குறிப்பிட்ட சில திருத்தங்களைப் பற்றிய குறிப்புடன் சட்டமூலம் அதே குழுவிற்கு மீளச்சமர்ப்பிக்கப்படலாம்.

**மூன்றாம் மதிப்பீடு**

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 71.**

ஒரு சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவால் நிறைவேற்றப்பட்ட அல்லது ஒரு விசேட குழுவால் திருத்தமின்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட ஒரு பிரேரணையின் அடிப்படையில் உடனே மூன்றாம் மதிப்பீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்படலாம். அல்லது பாராளுமன்றம் பணித்தால் மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்படலாம்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 72.**

(1) துறைசார் மேற்பார்வைக் குழுவினால் அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவினால் திருத்தங்களின்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட சட்டமூலமொன்று பரிசீலனைக்கென நியமிக்கப்பட்ட நாளன்று உடனடியாக மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம். அல்லது மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

(2) துறைசார் மேற்பார்வைக் குழு அல்லது சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழு சட்டமூலத்தை திருத்தியிருந்தால் குழுவினால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றம் அறிக்கை பரிசீலனை செய்து முடித்தவுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம். அல்லது மூன்றாவது மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 73.**

ஒரு சட்டமூலத்தின் மூன்றாவது மதிப்பீட்டின்போது அறிவித்தலின் பின்னரான பிரேரணையின் மேல் வார்த்தைகளில் அல்லது வரைவு தேவைப்பாடுகளிற்கு ஏதேனும் திருத்தங்கள் செய்யப்படலாம். சபாநாயகரினால் சட்டமூலத்தில் சான்றுரை எழுதப்படுவதற்கு முன்னர் சட்டமூலத்திலிருக்கக் கூடிய இலக்கணப் பிழை அல்லது தட்டெழுத்துப் பிழை எதனையும் திருத்துவதற்குச் சபாநாயகருக்குத் தத்துவம் உண்டு.

**சபாநாயகரின் சான்றுரை**

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 74.**

பாராளுமன்றத்தினால் சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசியலைமப்பின் 79 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட சான்றுரையை இயன்றளவு விரைவாக சபாநாயகர் சிங்கள, தமிழ் மொழி மூல சட்டமூலத்தில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

**20ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூல வரைபு நீதியமைச்சர் அலி சப்ரியினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு, அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. அமைச்சரவை அனுமதி வழங்கிய 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூல வரைவு, செப்டெம்பர் 2 ஆம் திகதியன்று அச்சிடப்பட்டு, செப்டெம்பர் 3 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டிருந்தது.

அதன் பின்னர் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 ஆம் திகதியன்று (செவ்வாய்க்கிழமை) பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் படி ஒரு வாரத்தினுள் அதனை சவாலுக்குட்படுத்தி எந்தவொரு பிரஜைக்கும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய முடியும். அவ்வாறு யாரும் சவாலுக்குட்படுத்தாவிட்டால் 20 ஆவது திருத்தம் 7 நாட்களுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

யாரேனும் குறிப்பிட்ட காலத்துக்குள் 20 ஆவது திருத்தத்தை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தால், உயர் நீதிமன்றம் மனுத் தாக்கல் செய்யப்பட்ட திகதியில் இருந்து 21 நாட்களுக்குள் அது தொடர்பான தீர்ப்பை வழங்க வேண்டும். இந்த காலப் பகுதியில் இந்த சட்டமூலம் தொடர்பில் எந்த நடவடிக்கையையும் பாராளுமன்றத்துக்குள் மேற்கொள்ள முடியாது. ஆனால் உயர் நீதிமன்றம் 21 நாட்களை எடுத்துக்கொள்ளாமல் அதற்கு முன்னர் தீர்ப்பை வழங்கினால், அதன் பிறகு 20 ஆவது திருத்தம் 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால் அரசமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூலத்துக்கு எதிராக 20 இற்கு மேற்பட்ட மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அரசமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் 2020 செப்டெம்பர் 29 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சில நாட்கள் பிரதம நீதியரசர் உள்ளிட்ட ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாமினரால் ஆராயப்பட்டன. சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் நிலைப்பாடு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அரசியலமைப்பின் 121 (1) சரத்தின் கீழ் அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில், தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் தனக்குக் கிடைத்திருப்பதாக 2020 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இந்தச் சட்டமூலம் அரசியலமைப்பின் 82 (1) சரத்துக்கு இணங்கும் வகையில் காணப்படுவதுடன், அரசியலமைப்பின் 82 (5) சரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டமூலத்தின் 3,4,14 மற்றும் 22 ஆம் சரத்துக்களின் தற்போதைய நிலைமை அரசியலமைப்பின் 3 ஆவது சரத்துடன் இணங்கவில்லையென்றும் 4 ஆவது சரத்துடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும் என்றும், இதற்கமைய அரசியலமைப்பின் 83 இன் கீழ் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அனுமதி அவசியமாகும்.

இருந்தபோதும், 3 ஆவது மற்றும் 14 ஆவது சரத்துக்களில் உள்ள முரணான பகுதிகள் குழு நிலையில் திருத்தம் மேற்கொள்வதன் மூலம் நிறைவேற்ற முடியும். 5 ஆவது சரத்தில் இருக்கும் முரணான பகுதிகளை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டதாக உகந்த வகையில், திருத்தி நீக்குவதன் மூலம் நிறைவேற்ற முடியும். உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானம் அன்றைய நடவடிக்கைகளின் அதிகாரபூர்வ அறிக்கையில் அச்சிடப்பட வேண்டும் என்றும் நான் உத்தரவிடுகிறேன் எனக் குறிப்பிட்டார்.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் (வர்த்தமானி-மூலப்பிரதி) நீதி அமைச்சரினால் 2020 செப்டெம்பர் 22 ஆம் திகதியன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் 23 ஆம் திகதியும் தொடரப்பட்டது. இரு தினங்களாக முற்பகல் 10 மணி முதல் இரவு 7.30 மணிவரை இடம்பெற்ற 20 ஆவது திருத்த சட்டமூலம் மீதான விவாதம், நீதி அமைச்சர் அலி சப்ரி ஆரம்பித்து வைத்தார்.

எதிரணி சார்பில் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எம்.பி.விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றினார். இரண்டாம் நாள் இரவு 7.30 மணிக்கு விவாதம் நிறைவடைந்த நிலையில் குழுநிலையில் திருத்தங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன. இதன்போது ஆளும் தரப்பு சார்பில் சுமார் 50 திருத்தங்களும் எதிரணி சார்பில் சுமார் 57 திருத்தங்களும் முன்வைக்கப்பட்டன. இதன்பின் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற குழுத்தலைவர் அநுர குமார திஸாநாயக்க இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை கோரியிருந்தார்.

சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீடு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. அதற்கமைய 2/3 பெரும்பான்மை வாக்குகளால் 20 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது (ஆதரவாக 156, எதிராக 65).

வாக்கெடுப்புக்கு மூவர் வருகை தரவில்லை. அதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமுகமளிக்கவில்லை. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட வேண்டிய தேசியப் பட்டியல் உறுப்பினரும் எமது மக்கள் சக்தியின் சார்பில் தெரிவு செய்யப்பட வேண்டிய தேசியப் பட்டியல் எம்.பியும் இதுவரையில் சத்தியப்பிரமாணம் செய்யப்படவில்லை.

முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளி கட்சிகளில் ஒன்றான மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான ஏ.அரவிந்தகுமார், திருத்த சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏனைய உறுப்பினர்களான மனோ கணேசன், பி.திகாம்பரம், வேலுகுமார், வே.இராதாகிருஷ்ணன், உதயா மற்றும் வேலுகுமார் ஆகியோர் எதிராக வாக்களித்தனர். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எட்டுப் பேர் ஆதரவாக வாக்களித்தார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினரான டயனா கமகே, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களான நஷீர் அஹமட், ஏ.ஏ.எஸ்.எம்.ரஹீம், பைசல் காசிம், எச்.எம்.எம். ஹரீஸ், எம்.எஸ். தௌபீக், ஏ.அரவிந்தகுமார், இஷாக் ரஹ்மான் ஆகியோரே இவ்வாறு ஆதரவாக வாக்களித்தனர்.

(தொடரும்...)



# மரக்கறி விலையை கட்டுப்படுத்த புதிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

மரக்கறி விலையைக் கட்டுப்படுத்த விவசாய அமைச்சின் நேரடி தலையீட்டுடன் அடுத்த வாரம் முதல் விசேட வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப் படும் என்று விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளை கொள்வனவு செய்து அவற்றை பொருளாதார மத்திய நிலையங்களுக்கு கொண்டு வருவதில் விவசாய அமைச்சு தலையிட்டுள்ளதாக நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலையங்களில் ஒதுக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்களை வேறு வியாபாரங்களுக்காக குத்தகைக்கு விடுவதைத் தடுக்கும் விசேட சுற்றறிக்கை ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# செய்தித்துளிகள்

## வடக்கு - கிழக்கில் அவ்வப்போது மழை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. "நாட்டில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக உருவாகி வருகின்றது.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது: நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)


## விமான நிலைய ஊழியருக்கு கொரோனா உறுதி

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபட்டுவரும் பெண் ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிலாபம் - ஆராச்சிகட்டுவ பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணொருவரே நேற்று கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர் மேலதிக சிகிச்சைக்காக வத்துபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக விமான நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை குறித்த பெண்ணுடன் நெருங்கிய தொடர்பினை பேணிய ஏனையவர்களைக் கண்டறியும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## தேங்காய் உடைப்பது ஏன்?

(தொடர்ச்சி)

அதுபோல் இளம் வயதில் ஆசைகளுடன் சுற்றித்திரியும் நாம் அனுபவ ஞானம் எனும் பக்குவம் வர வர உலக ஆசைகளைத் துறந்து விடுகிறோம். உலக பற்று நீங்கும் போது ஒருவன் ஆன்ம பலம் பெற்று இறைவனுடன் கலந்து வாழ்வதை கற்றுக் கொள்கிறான். தேங்காயைப் பார்க்கும் போதெல்லாம் இது நம் நினைவுக்கு வரவேண்டும்.

நைவேத்தியம் செய்யும் போது நன்கு முற்றிய தேங்காயைத் தான் நாம் கடவுளுக்குப் படைக்க வேண்டும். இது எதை காட்டுகிறது தெரியுமா? மனப்பக்குவம் அடைந்த உள்ளத்தையே ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதையே காட்டுகிறது.

தேங்காய் உடைத்து சாமி கும்பிட்டு விட்டு நமது மனதை இறைவனிடம் சமர்ப்பிக்கவில்லையென்றால் தேங்காய், பழத்தை நைவேத்தியம் செய்வதில் கொஞ்சம் கூட அர்த்தமே இல்லாமல் போய்விடும். எனவே இறைவனுக்கு நைவேத்தியம் செய்யும் போது பழமோ நீரோ இலையோ எதுவாக இருந்தாலும் நம் மனதில் பக்தியுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

தேங்காய் தரும் தென்னை மரம் தியாகத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டே இறைவழிபாட்டுக்காகவே தென்னை மரத்தை இவ்வுலகில் தன் தவ வலிமையால் விஸ்வாமித்திரர் உற்பத்தி செய்ததாகப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

இறை வழிபாடு செய்யும் போது தேங்காய் உடைபடுவதில் சில ஐதீகங்கள் உள்ளன. தேங்காய் ஒரே அடியில் சரிசமமாக இரு பகுதிகளாக உடைய வேண்டும். அப்படி உடைவது சுபமானதாகக் கருதப்படும். சில சமயம் உடைத்த தேங்காய்க்குள் பூ இருக்கும். இது மிக மிக நல்லது என்பதைக் குறிக்கும்.

சில சமயம் தேங்காய் ஒரு பகுதி சற்று சிறியதாவும் மற்றொரு பகுதி சற்று பெரியதாகவும் உடைபடலாம். இதில் தவறு இல்லை.

தேங்காய் குடுமி இருக்கும் பகுதி மற்றப் பகுதியை விட சற்று பெரியதாக உடைந்தால் மிகவும் நல்லது. தொட்டில் போல தேங்காய் உடைந்தால் குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பார்கள்.

உடைந்த தேங்காய் முடிகளை மீண்டும் இணைத்துப் பொருத்தக் கூடாது. அது குடும்பத்துக்கு நல்லதல்ல என்கிறார்கள்.

இறை வழிபாட்டுக்குப் பயன்படுத்தும் தேங்காய் அழுகி இருப்பது குற்றமாகும். தேங்காயை உடைக்கும்போது அது சரிசமமாக இரண்டாக உடையாமல் துண்டு துண்டாக உடைவது நல்லதல்ல.

அதுபோல தேங்காய் சரிபாதியாக உடைபடாமல் நெடுக்காக உடைவதும் நல்லதல்ல. தேங்காயை உடைக்கும்போது நன்றாக கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். அது கை விட்டு நழுவி அப்பால் போய் விழுவது அபசகுனமாகும்.

இறைவனுக்கு படைக்கும் தேங்காயை சைவ சமையலுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அந்த உணவு மனிதனின் சாத்வீக குணத்தை மேலோங்க செய்யும். தோஷப் பரிகாரத்துக்கும் சனி பகவானுக்கும் காளி தேவிக்கும் அர்ச்சனை செய்த தேங்காயை மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவது நல்லது.

கர்ப்பிணிப் பெண்கள் தேங்காய் உடைக்கக்கூடாது. சிதறு காயும் உடைக்கக் கூடாது. தேங்காய் உடைப்பதனால் ஏற்படும் அதிர்வுகள் பெண்களின் கர்ப்பப்பைக்குப் பாதிப்பை உண்டாக்கி விடும் என்கிறார்கள். தேங்காய் உடைக்கும்போது எப்போதும் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தேங்காயைக் குடுமியோடுதான் உடைக்க வேண்டும். சரிபாதியாக உடைத்த பிறகு குடுமியை நீக்கி விட்டு இறைவனுக்கு நிவேதனம் செய்ய வேண்டும்.

தேங்காய்க்குள் இருக்கும் நீரை சில மகான்கள் நமது வினைகளாகக் குறிப்பிட்டனர்.

தேங்காய் உடைக்கும் போது நீர் வெளியேறுவது நமது வினைகள் வெளியேறி விட்டதற்கு ஒப்பானது என்கிறார்கள். (தொடரும்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 320 | 400 |
| தக்காளி | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 150 | 200 | 240 |
| பூசணி | 120 | 100 | 120 |
| புடோல் | 180 | 140 | 200 |
| வாழைக்காய் | 60 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300-400 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 160 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 500 | 400 | 300 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 140 | 160 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 400 |
| போஞ்சி | 280 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 220 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | -- | 300 |
| வெங்காயப்பூ | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 140 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பிலா | 60 | -- | 150 |



# சிறுவர் அரங்கம்

## பதிலுக்குப் பதில்

ஒரு நாள் முல்லா ஒரு துணிக் கடைக்குச் சென்றார். அங்கு தலைப் பாகைகளும் விற்கப்பட்டன. தமக்கு ஒரு தலைப்பாகை வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் முல்லா அங்கு சென்றார்.

அழகான ஒரு தலைப் பாகையைத் தேர்ந்தெடுத்து விலை பேசினார். பிறகு தலைப்பாகையைத் தலையில் அணிந்து கொண்டார்.

அந்தக் கடையில் அழகான சால்வைகளும் விற்கப்படுவதை முல்லா கண்டார். தலைப்பாகைக்கு பதிலாக சால்வையை வாங்கி விடலாம் என்று அவருக்குத் தோன்றியது.


அதனால் அவர் கடைக் காரனைப் பார்த்து இந்தத் தலைப்பாகைக்குப் பதிலாக சால்வையை வாங்கிக் கொள்கிறேன். இரண்டின் விலையும் ஒன்றாகத் தானே இருக்கிறது? என்றார்.

உங்கள் விருப்பம்போல எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார் கடைக்காரர்.

முல்லா தலைப்பாகையைக் கழற்றிக் கொடுத்து விட்டு சால்வையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

ஐயா, நீங்கள் வாங்கிய சால்வைக்குப் பணம் கொடுக்கவில்லையே என்று கடைக்காரர் கேட்டார்.

நான் ஏன் பணம் கொடுக்க வேண்டும். தலைப் பாகைக்குப் பதிலாகத்தானே சால்வையை வாங்கிக் கொண்டேன் என்றார் முல்லா.



அப்படியானால் தலைப் பாகைக்கு பணம் கொடுங்கள் என்றார் கடைக்காரர்.

தலைப்பாகைக்கு ஏன் பணம் தரவேண்டும்? அதைத்தான் உங்களிடம் திருப்பி கொடுத்து விட்டேனே? என்று கூறிவாறு கடையை விட்டுக் கம்பீரமாக வெளியே நடந்தார்.

கடைக்காரருக்கு என்ன செய்வது என்று புரியாமல் நின்று கொண்டிருந்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

வா வா எப்படி இருக்கின்றாய் பெர்டிகாஸ்?

என்னை விடு. நான் ஒரு விடயத்தைக் கேட்பதற்காக வந்தேன். நிதானமாகக் கேட்கலாம் பெர்டிகாஸ்.

ஆமாம், உன்னுடைய சொத்துக்களை எல்லாம் பிரித்து வீரர்களுக்கு வழங்குவதாகக் கேள்விப்பட்டேனே? பாதி மெய். பாதி பொய்? புரியவில்லை.

என்னுடைய சொத்துக்களை அல்ல. அரசாங்கச் சொத்துக்களைத் தான் வழங்குகின்றேன். இதிலென்ன குழப்பம் உனக்கு?



அலெக்சாண்டரின் குதிரைப்படை

குழப்பம் உனக்கு தான். இருப்பதை எல்லாம் எல்லோருக்கும் வழங்கிவிட்டால் உனக்கென்று என்னதான் மிஞ்சும்? என்னிடம் நிறைய மிஞ்சி இருக்கின்றன. கவலைப்படாதே பெர்டிகாஸ். என்ன இருக்கின்றது சொல்?. நம்பிக்கை.

இன்று நான் நம்முடைய படைவீரர்களைச் சந்திக்க வேண்டும் ஏற்பாடு செய்யுங்கள்.

உடனே விறுவிறு வென களத்தில் இறங்கினார் தலைமைத் தளபதி பார்மீனியோ. குதிரைப்படை, காலாட் படை எல்லாம் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அலெக்சாண்டர் பார்வையிடுவதற்கு வசதியாக. எல்லோரையும் வழிநடத்தும் வகையில் படைகளின் முன்னால் நெஞ்சை நிமிர்த்தி நின்று கொண்டிருந்தார் பார்மீனியோ.

குதிரை வீரர்கள் இருவர் பார்மீனியோவை நோக்கி வந்தனர். இன்னும் ஒரிரு நிமிடங்களில் மன்னர் வந்து விடுவார்... நல்லது...

நிலம் அதிர்வது போன்ற ஓசை. என்ன வென்று திரும்பிப் பார்த்தார் பார்மீனியோ. கூப்பிடு தூரத்தில் அலெக்சாண்டர் தன்னுடைய பியூசிபேலஸ் குதிரையில் ஏறி வேகமாகப் படைகளை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

மன்னருக்கு வணக்கம். தாங்கள் நேரில் வந்து வீரர்களைப் பார்வையிட முடிவு செய்ததற்கு நன்றி. படைகள் தயாரா? ஒருமுறை பார்த்து விடலாமா?

ஓ தாராளமாக. அதற்காகத் தானே காத்துக் கொண்டிருகின்றோம்.

(தொடரும்)

> உண்மையாக நாணயமாக நடப்பவனுக்கு மக்கள் நெஞ்சத்தில் ஓர் சிறந்த இடம் உண்டு.
> – பெரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண ஆளுநருக்கு ஓர் அவசர மடல்

வடக்கு மாகாண ஆளுநருக்கு எழுதுகின்ற அவசர மடல் இது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாக் கொத்தணி இல்லை என்பதாக உங்களின் கருத்து அமைந்துள்ளது.

அதேநேரம் கொழும்பில் இருந்து வட பகுதிக்கு வருகின்ற பொதுமக்கள், பொதுசுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்து உரிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தாலேயே யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று பரவியதாகக் கூறியுள்ளீர்கள்.

இவ்வாறு தாங்கள் கூறுவதற்குள் இருக்கக்கூடிய நியாயங்கள் ஓரளவுக்கு ஏற்புடையதென்பதையும் அடியோடு மறுக்கவில்லை.

மாறாக, பொதுமக்கள் தம்பாட்டில் பொது அறிவித்தல்களைக் கடைப்பிடித்து அதன்படி நடந்து கொள்வர் என்றால், பொலிஸ் திணைக்களம் உட்பட நீதிபரிபாலனம் என எதுவும் தேவைப்பட்டிருக்காது.

ஆக, சட்டத்தை – பொது அறிவுறுத்தலை – சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகள், பரிசோதனைகள், மருத்துவச் சோதனைச் சாவடிகள், பதிவுகள் என்பவற்றை மேற்கொள்வது கட்டாயமானது.

அந்த வகையில், கொரோனாத் தொற்று தென்பகுதியில் அதிலும் குறிப்பாக மேல் மாகாணத்தில் பரவிவிட்டது என்றவுடன் வடக்கு மாகாண நிர்வாகம் விழிப்படைந்திருக்க வேண்டும்.

ஆனால் எந்த அதிகாரமும் இல்லாதவர்கள்போல தாம் செய்கின்ற நடவடிக்கைகளால் தம் மீது அரசாங்கத்துக்குக் கோபம் வந்துவிடக்கூடாது என்பதுபோல, தென்பகுதியில் இருந்து வட பகுதிக்கு வருகின்றவர்கள் தொடர்பில் எந்தப் பரிசோதனையும் பதிவும் செய்யப்படாமல் விடப்பட்டது.

கொரோனாத் தொற்று வடக்குக்கு பரவக்கூடிய வாய்ப்புகள் நிறைய உண்டு என்பதைத் தெரிந்திருந்தும் தென்பகுதியில் இருந்து வட பகுதிக்கு நுழைகின்றவர்களை வடபகுதியின் நுழைவாயிலில் வைத்து அல்லது யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லையில் வைத்து பதிவுகள் செய்யப்பட்டனவா? அல்லது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதா? என்றால் எதுவும் நடக்கவில்லை.

மாறாக, தம்புள்ளையில் இருந்து மரக்கறி கொண்டு வருகின்றவர்கள் மற்றும் யாழ்ப்பாணத்துக்கு லொறிகளிலும் கொள்கலன்களிலும் பொருட்களை ஏற்றி வருகின்ற தென்பகுதிச் சாரதிகள் இரவோடு இரவாக வடபகுதிக்குள் நுழைந்து மரக்கறிகளையும் பொருட்களையும் இறக்கிவிட்டு மறுநாள் சென்று விடுகின்றனர்.

இவர்கள் தங்குகின்ற இடங்கள், உணவு அருந்துகின்ற கடைகள், பழகுகின்ற நபர்கள் என இதுபற்றி வடக்கு மாகாண நிர்வாகம் ஏதேனும் சிந்தித்ததா? என்றால் இல்லவே இல்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று பரவுவதற்குப் பொதுமக்களே காரணம் என்றுரைப்பது எந்த வகையில் முதன்மை நியாயம் ஆகும் என்பதுதான் நம் கேள்வி.

# பாராளுமன்றை மலினப்படுத்த வேண்டாம்

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றை மலினப்படுத்தக் கூடாது என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

20ஆம்திருத்தச்சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நாள் முதலே அதன் அபாயங்களைப் பற்றி தாம் எச்சரிக்கை விடுத்து வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றின் கௌரவத் தன்மைக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளதாகவும் தற்பொழுது அது தபாற கந்தோரின் நிலையை அடைந்துள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம், பாராளுமன்றின் அதிகாரத்தை விஞ்சிசென்றிருப்பதாகவும் இதன் ஓர் கட்டமாகவே பொதுச் சேவைகள் ஆணைக்குழுவை கலைப்பதற்கு ஜனாதிபதியின் செயலாளர் கடிதம் அனுப்பியதனை கருத வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ம-3)

## சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட ரூபா 384 மில்லியன் மதிப்புள்ள 768 மெட்ரிக்தொன் ரின் மீன்களைக் கொண்ட 48 கொள்கலன்களை மீண்டும் சீனாவுக்கு திருப்பி அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்களின் நிராகரிக்கப்பட்ட இருப்புக்களைக் கொண்ட கொள்கலன்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளதாக இலங்கை சுங்க ஊடக செய்தித் தொடர்பாளர் சுனில் ஜெயரத்ன நேற்று தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்கள் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் எஸ்.எல்.எஸ். 591 2014 தரச் சான்றிதமுடன் குறித்த ரின் மீன்கள் நிராகரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (நி)

## தொடரும் போராட்டம்

(பனிக்கன்குளம்)

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மீனவர்களின் கவனயீர்ப்பு போராட்டமானது நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.(5-4-281)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அணுப்பிரமாணம்

நீங்கள் ஒருவரை விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர் உங்களுக்கு மேலும் மேலும் அதிகமாக வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். எனினும் மனநிறைவு ஏற்படுவதில்லை. உங்களுக்கு நிறைவைத் தருவதற்கு அணுப்பிரமாணம் அதாவது அந்த ஒருவரின் ஒரே ஒரு அணு மட்டும் போதாது.

ஆற்றிலே தண்ணீர் நிறைய இருக்கிறது. ஒரு வாய் நீர் தாகத்தை அடக்கி விடுகிறது. உலகில் உணவு நிறைய இருப்பினும் ஒரு கவளம் உங்கள் பசியைப் போக்கி விடுகிறது. அதைப்போல உங்களுக்குத் தேவைப்படுவது மிகச்சிறிய அளவுதான்.

வாழ்க்கையில் எல்லாவற்றிலும் மிகச்சிறிய அளவை ஏற்றுக்கொள்ளுங்கள். அது நிச்சயம் நிறைவைத் தரும்.

தொந்தரவைப் பற்றி என்ன செய்வது? அந்த உலகில் தொந்தரவு ஏராளமாக உள்ளது. அதன் மிகச்சிறிய பகுதியை நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடும்.

அந்த உலகில் தொந்தரவு ஏராளமாக உள்ளது. அதன் மிகச்சிறிய பகுதியை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடும்.

தெய்வீகத்தன்மையின் மிகச்சிறிய அளவை உங்களுடன் எடுத்துக்கொண்டு மனநிறைவுடன் இன்றிரவு தூங்கச் செல்லுங்கள். அணுப்பிரமாணத்திலிருந்து தான் திருப்தி தோன்றுகிறது. வேண்டும் இன்னும் வேண்டும் என்பதிலிருந்து அல்ல.

நாம் பிறர்க்கு கொடுப்பது பற்றிக் கூறுங்கள். மிகச்சிறிய அளவை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். மீதியைப் பிறர்க்குக் கொடுத்து விடுங்கள். (முற்றும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** வி.எம் வீதி, கல்லூரி வீதி, சாளம்பை, தம்பசிட்டி, கிராமக்கோடு, அராலி பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** கோவில் குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, மகாகச்சக்கொடிய கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** அரசடிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**மனிதன் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் கழுவாய் உண்டு. நன்றி கொன்ற பாவத்திற்கு மட்டும் கழுவாய் இல்லை.**

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை<br>செய்நன்றி கொன்ற மகற்கு"**

**திருப்புகழில் மொத்தம் 16 ஆயிரம் பாடல்கள். இப்பொழுது 1311 பாடல்கள் கிடைத்திருக்கின்றன. எஞ்சிய பாடல்கள் மறைந்து விட்டன.**

**வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளையவர்கள் நெடிது முயன்று ஏடு தேடித் திருப்புகழைத் தந்தார். அவருக்குத் தமிழுலகம் கடப்பாடுடையது.**

**'நாத விந்து கலாதி...' என்பன போன்ற பாடல்கள் பாராயணத்துக்கு மிகவும் சிறந்தவை. (தொடரும்)**

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டுப்பூசைக் குறிப்புகள்

யாராவது தூங்கிக் கொண்டிருக்கும்போது காலை, மாலை வேளைகளில் விளக்கேற்றக் கூடாது. தூங்குபவர்கள் எழுந்த பிறகுதான் விளக்கேற்ற வேண்டும். தூங்குபவர்களின் தலைக்கு நேராக தேங்காய் உடைக்கக் கூடாது.

பூஜையின்போது விபூதியை நீரில் குழைத்து பூசக் கூடாது. தீட்சை பெற்றவர்கள் மட்டுமே விபூதியை நீரில் குழைத்து பூசலாம்.

கஷ்டங்கள் நீங்க, நினைத்தது நடக்க எளிய வழி தீபம் ஏற்றுவதுதான் தீப ஒளி இருக்குமிடத்தில் தெய்வ அனுக்கிரகம் நிறைந்திருக்கும். வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தீபம் ஏற்றி வைக்கலாம்.

தீபத்தில் உள்ள எண்ணெய் தான் எரிய வேண்டுமே தவிர திரி அல்ல. திரி எரிந்து கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

விளக்கு எரிந்து கொண்டிருக்கும் போது கைவிரலால் எண்ணெய்யிலுள்ள தூசியை எடுப்பதோ திரியை தூண்டுதோ கூடாது.

ஆண்கள் தெய்வங்களை வழிபடும்போது தையல் உள்ள உடைகளை அணியக் கூடாது. (முற்றும்)

# தெற்கில் சாதனை நிகழ்த்திய வடக்கு

# வாகை சூடியது ஜப்னா ஸ்டாலியன்ஸ்

இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் ஏற்பாடு செய்த லங்கா பிரீமியர் லீக் இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடரை திசர பெரேரா தலைமையிலான ஜப்னா ஸ்டாலியன்ஸ் கைப்பற்றியுள்ளது.

அம்பாந்தோட்டை, சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் போட்டியாளரான காலி கிளாடியேட்டர்ஸை எதிர்த்து ஆடிய ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி 53 ஓட்டங்கள் வித்தியசத்தில் வெற்றிபெற்று சம்பியனாக முடிசூடியது.



போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணியானது முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய அவிஷ்கா பெர்னாண்டோ மற்றும் ஜோன்சன் சார்லஸ் ஆகியோர் 28 பந்துகளில் 44 ஓட்டங்களை எடுத்தனர்.

அவிஷ்கா 23 பந்துகளில் இரண்டு சிக்ஸர்கள் மற்றும் ஒரு பவுண்டரிகளுடன் 27 ஓட்டங்களை எடுத்தார், சார்லஸ் 15 பந்துகளில் 26 ஓட்டங்களை எடுத்தார்.

எனினும் 4.4 ஆவது ஓவரில் தனஞ்சய லக்ஷானின் பந்து வீச்சில் தனுஷ்க குணதிலகவின் அற்புதமான பிடியெடுப்புக் காரணமாக ஜோன்சன் சார்லஸ் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த அசலங்காவும் 10 ஓட்டங்களுடன் சந்தகனின் பந்து வீச்சில் சிக்கி வெளியேற, 8.4



ஆவது ஓவரில் அவிஷ்க பெர்னாண்டோ 27 ஓட்டங்களுடனேயே செஹான் அராச்சிகேயின் பந்து வீச்சில் செஹான் ஜெயசூரியவிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

இதனால் யாழ்ப்பாணம் அணி 70 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்தது.

நான்காவது விக்கெட்டுக்கு மாலிக் மற்றும் தனஞ்சய டி சில்வா ஜோடி சேர்ந்து 44 பந்துகளில் 69 ஓட்டங்களை சேர்க்க யாழ்ப்பாணம் அணி 139 ஓட்டங்களை பெற்றது.

ஷோயிப் மாலிக் 35 பந்துகளில் மூன்று சிக்ஸர்கள் மற்றும் மூன்று பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்களை எடுத்து அணி சார்பில் அதிகபடியான ஓட்டங்களை பதிவு செய்து தனஞ்சய லக்ஷானின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க, தனஞ்சய டி சில்வா 20 பந்துகளில் இரண்டு சிக்ஸர் மற்றும் இரண்டு பவுண்டரிகளுடன் 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

போட்டியில் இறுதி தருணத்தில் அதிரடி காட்டிய அணித் தலைவர் திசார பெரேரா இன்னிங்ஸின் இறுதி 24 பந்துகளில் 14 ஐ மாத்திரம் எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர் மற்றும் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காதிருந்தார்.

இதனால் யாழ்ப்பாணம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களை குவித்தது.

பந்து வீச்சில் காலி அணி சார்பில் தனஞ்சய லக்ஷன் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த போட்டியில் அதிக விக்கெட் எடுத்த இரண்டாவது வீரர் தனஞ்சய லக்ஷான் ஆவார்.

> " இலங்கை கிரிக்கெட் வரலாற்றிலேயே யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவம் செய்து ஓர் அணியின் பெயர் சூட்டப்படுவது இதுவே முதன் முறையாகும். அதிலும், யாழ் . அணியில் நம் வீரர்களும் களம் கண்டு சாதிக்க வேண்டும் என்ற நம் க்னவு நனவாகி சர்வதேச தரத்தில் அவர்கள் நிரூபிக்க வாய்ப்பு கிடைத்தது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது."




அவரைத் தவிர அமீர், செஹான் அராச்சிகே மற்றும் சந்தகான் ஆகியோரும் தமது பங்கிற்கு தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

189 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காலி அணியானது தொடக்கத்தில் இருந்தே எதிர்பாராத பின்னடைவை சந்தித்தது.

ஆரம்ப ஓவரில் இருந்து பந்து வீசிய தனஞ்சய டி சில்வா, சுரங்கா லக்மல் ஆகியோர் முதல் ஆறு ஓவர்களில் வெறும் 30 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை தகர்த்தெறிந்தனர்.

தொடரில் அதிக ஓட்டங்களை குவித்த வீரரான தனுஷ்க குணதிலக்க ரன் அவுட் ஆனது காலி அணிக்கு தாங்க முடியாத பேரிழப்பாகும்.



இதனிடையே முதல் ஓவரிலேயே ஹஸ்ரத்துல்லா ஸசாயை டக்கவுட்டுடன் ஆட்டமிழக்கச் செய்து கிளாடியேட்டருக்கு இன்னிங்ஸைத் தொடங்க தனஞ்சய டி சில்வா பெரும் சவாலை ஏற்படுத்தினார்.

ஆனால் அணித் தலைவர் பானுகா ராஜபக்ஷ மற்றும் ஷெஹான் ஜெயசூரிய நான்காவது விக்கெட்டுக்காக 55 ஓட்டங்களை பெற அணியின் ஓட்ட எண்ணிக்கையும் 62 ஆனது.

எனினும் ஷோயிப் மாலிக், உஸ்மான் ஷின்வரி ஆகியோர் கூட்டாக ஒன்றிணைந்து பானுக ராஜபக்ஷவை 40 ஓட்டங்களுடனும், ஷெஹான் ஜெயசூரியவை 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்கச் செய்து வெளியேற்றினர்.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிய பானுக ராஜபக்ஷ 17 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக இந்த 40 ஓட்டங்களை பெற்றார்.

நடுத்தவர வரிசையில் துடுப்பெடுத்தாடுவதற்கு களமிறங்கிய அசாம் கான், 17 பந்துகளில் நான்கு சிக்ஸர்கள் மற்றும் ஒரு பவுண்டரிகளுடன் 36 ஓட்டங்களை எடுத்தார். இருந்தபோதும் அவரை டுவைன் ஆலிவர் சரித் அசலங்காவின் உதவியுடன் ஆட்டமிழக்கச் செய்து வெளியேற்றினார்.

அவரின் வெளியேற்றத்தின் பின்னர் அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிய காலி அணி இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

ஸ்டாலியன்ஸ் அணி சார்பில் பந்து வீச்சில் ஷோயிப் மாலிக் மற்றும் உஸ்மான் ஷின்வாரி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், வர்னிந்து ஹசரங்க, டுவைன் ஆலிவர், தனஞ்சய டி சில்வா மற்றும் சுரங்க லக்மால் ஆகியோர் தலா ஒரு விக்கெட் டுகளை வீழ்த்தினர்.

இதனால் ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி 53 ஓட்டங்களினால் வெற்றி பெற்று முதல் லங்கா பிரீமியர் லீக் கிண்ணத்தை முத்தமிட்டது.

## நுணாவிலில்...

மாலை சாவகச்சேரி பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுணாவில், நாவற்குழி மற்றும் பெருங்குளம் பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்களே 240 மில்லிக் கிராம் ஹெரோயினுடன் நுணாவில் பகுதியில் வைத்து கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,30)

## பொதுப் போக்கு...

தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் இராணுவத்தினரால் சீரமைக்கப்பட்ட குளத்தினை விவசாயிகளின் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

அதில் பங்கேற்ற பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

அதன்போதே மேற்கண்ட தகவலை இராணுவத் தளபதி தெரிவித்தார்.

கொரோனா நோயாளிகள் பதிவாகாத பகுதிகளில் அவ்வப்போது சில நபர்களின் பொறுப்பற்ற செயல்களால் குறைந்த எண்ணிக்கையிலான நோயாளிகளுக்கு தொற்று ஏற்படுகின்றது என்றார். (ம-3,18,101)

## புலிகளை மகிமை...

புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளை மகிமைப்படுத்தி, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவதைத் தடுக்கும் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அது விரைவில் அமுல்படுத்தப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (ம-3)

## மக்கள் பொறுப்...

அதிகாரிகள் சங்கத்தின் செய்தி தொடர்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

ஒரு பிரதேசம் தனிமைப்படுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டால், உடனடியாக அங்குள்ள மக்கள் வேறு இடங்களுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, இதனை தடுப்பதற்கு பாதுகாப்பு தரப்பினர் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன், சுகாதாரத் துறையினரும் வினைத்திறனாக செயற்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களிடம் இருந்து இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளை எதிர்பார்க்கவில்லை என தெரிவித்துள்ள அவர், இந்த நிலைமை தொடர்ந்தால் மீண்டும் நாடு முழுவதையும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் எச்சரித்துள்ளார். (ம-3)

## மருதனார்மடம்...

இதேவேளை நேற்று யாழ்.மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 110 பேருக்கு பிசிஆர் பரிசோதனையில், உடுவிலைச் சேர்ந்த ஒருவருக்கும் மானிப்பாயைச் சேர்ந்த ஒருவருக்கும் என இரண்டு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நேற்று மட்டும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மருதனார்மட உப கொத்தணியில் 73 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது தவிர முல்லைத்தீவு தனிமைப் படுத்தலைச் சேர்ந்த 2 பேருக்கும் கோப்பாய் கோவிட் 19 சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## வடக்கு சந்தை...

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரனின் ஆலோசனைக்கு அமைய, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சனால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தை வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் வீதியோரம் அல்லது நடமாடும் விற்பனையை மேற்கொள்ள அனுமதிக்குமாறும் உள்ளூராட்சி ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்,

மருதனார்மடம் கொத்தணியின் தொடராக அனைத்துச் சந்தைகளின் வியாபாரிகளுக்கும் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அவற்றின் முடிவுகள் வருவதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றன.

அதுவரை ஆபத்தான சூழல் நிலவக்கூடிய அபாயம் காணப்படுகிறது. அதனால் வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பொதுச் சந்தைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த கொரோனா அபாய காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நடமாடும் வியாபார சேவை மற்றும் சமூக இடைவெளிகளுடன் பொது வெளியில் முன்னெடுக்கப்பட்ட வியாபார முறைகள் வெற்றி அளித்துள்ளதால் அந்த நடைமுறைகளைத் தொடருமாறு வியாபாரிகள் அறிவுறுத்தப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18,100)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு - இந்திய தூதர் சந்திப்பு இன்று

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், இலங்கைக்கான இந்திய தூதருக்குமிடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை இந்தியாவிற்கு அழைத்து பேசுவதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருந்தார்.

எனினும், அது இதுவரை சாத்தியமாகவில்லை. புதிய தூதர் கோபால் பாக்லே, இரா.சம்பந்தனுடன் ஒரு முறை பேசியிருந்தார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இலங்கை வந்த போது, இரா.சம்பந்தனுடன் பேசினார்.

இந்த நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இந்தியத் தூதர் கோபால் பாக்லேக்கிற்குமிடையில் இன்று சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொள்வார்கள். த.சித்தார்த்தன் யாழ்ப்பாணத்தில் தங்கி யிருப்பதால் சந்திப்பில் கலந்து கொள்ள மாட்டார் என தெரிகிறது.

இதற்கு பின்னர் 19, 20ஆம் திகதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலமைப்பு யோசனை சமர்ப்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நடைபெறும். இதில் கூட்டமைப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். (ம-3)

## மகனை ஏற்றச்...

வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயத்துக்கு அருகில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் 56 வயதுடைய க.சிறிஸ்கந்தராஜா என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## பிரான்ஸில்...

முல்லைத்தீவு இளைஞன் பிரான்ஸில் கொரோனா நோயால் நேற்று உயிரிழந்துள்ளார்.

குமுழமுனை கிழக்கைச் சேர்ந்த சிவபாதம் சாரங்கன் என்ற இளைஞனே கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3)

## ரூ 40 இலட்சம்...

நெல்லியடிப் பகுதியில் நேற்றுக் காலை நடத்திய அதிரடி சோதனை நடவடிக்கையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான 200 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது. (ம-3)

## ஆயிரத்து...

களையடுத்து தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஆயிரத்து 400 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 818 பேர் வீடுகளில் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

அத்துடன், கோவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்ட 88 பேர், சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்று சுன்னாகம் பொதுச் சந்தை வியாபாரிகள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று மாலை சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார். (ம-3.33)


தன நிதானய
திகதி - 2020.12.17
சீட்டிழுப்பு இலக்கம் - 376
J 01 05 09 15
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2634
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 47 63 65 77
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/12/17
சீட்டிழுப்பு இலக்கம் 4339
E 0 4 4 4 5 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0706
G 07 01 18 56 58

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1641 திகதி 2020.12.17
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 10 20 22 52
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 1135
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 17.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 91,473,185
வெற்றி இலக்கங்கள் 35 41 48 51 J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 3465
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 17.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,431,349
வெற்றி இலக்கங்கள் 01 40 50 67 P
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,729,362/=
திகதி: 17.12.2020
வெற்றி வாரம்: 3016
வர்ணம்: கபிலம்
வெற்றி இலக்கங்கள் 29 32 36 40
கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,400,820

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1309 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 17/12/2020 தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் E 15 25 59 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் 58,526,402

சம்பத் வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 393 திகதி 17.12.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 16 27 60
விதி எண் 2
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,811,732
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## யாழில் வன்முறைச் சம்பவங்களை

# கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் இராணுவத்தினர் ஈடுபடுவார்கள்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங் களை இராணுவத்தினர் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அதற்கிணங்க எதிர்காலத்தில் பொலி ஸாருடன் இணைந்து இராணுவமும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங் களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள் என கொரோனாத் தடுப்புக் கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இங்கே ஒருவர் யாழ்ப் பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங்களை இராணுவத்தினர் கட்டுப்படுத்த வேண்டும் என ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார்.

அதற்கிணங்க எதிர்காலத்தில் பொலி ஸாருடன் இணைந்து இராணுவமும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங் களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள்.

தற்போது யாழ். மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இது அனைவரும் அறிந்த விடயமே. எதிர் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாதவாறு இராணுவம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என் றார். (ம-03,101)

# வவுனியா இலுப்பையடியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை விற் பனை செய்த நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் ஹெரோயின் விற் பனை இடம்பெற்றுவருவதாக பொலிஸா ருக்கு கிடைத்த தகவலுக்கிற்கமைய, ஹெரோயின் கொள்வனவு செய்வதற்காக பொலிஸாரால் திட்டமிடப்பட்டு நபர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் அனுப்பப்பட்ட நபர் போதைப்பொருளை கொள்வனவு செய்த துடன், விற்பனை செய்த நபரை பொலி ஸாரிடம் அடையா ளப்படுத்தியுள்ளார்.

ஹெரோயின் விற்பனை செய் ததாக சந்தேகிக்கப் படும் நபர், தான் ஐயப்பன் விரதம் அனுஷ்டித்து வருவ தாகவும், போதைப் பொருள் விற்பனை யில் ஈடுபடவில்லை என்றும் தன்னை கைதுசெய்ய வேண் டாம் என்றும் பொலி ஸாரிடம் கெஞ்சியுள் ளார். இதனால் குறித்த பகுதியில் பொது மக்கள்ஒன்று கூடியதுடன், குழப் பமான நிலையும் ஏற்பட்டிருந்தது. பின்னர் குறித்த நபர் கைதுசெய் யப்பட்டு பொலிஸ் நிலையத் திற்கு அழைத்துச் செல் லப்பட்டார். (ம-03,250)


றோயல்

தேன் வாங்கும் வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு!!!

நீங்கள் "றோயல் தேன்" வாங்கும் போது கீழே கொடுக்கப்பட்டுள்ள விடயங்களை கவனத்திற் கொண்டு வாங்கவும்.




- படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சிவப்பு நிற தகர மூடியில் றோயல் என ஆங்கிலத்தில் வெள்ளை நிற எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளதா எனவும், வெள்ளை நிறத்தில் கிரீடம் உள்ளதா எனவும் பார்த்து வாங்கவும்.
- மற்றும் லேபலில் மூன்று மொழிகளிலும் றோயல் தேன் என அச்சிடப்பட்டுள்ளதா என வாசித்துப் பார்த்து வாங்கவும்.

உங்கள் நலன் கருதி ஆய்வு கூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.

Packed By : Royal Industries, Jaffna.

ஏக விநியோகஸ்தர்:

சிவா நறுமணப் பூங்கா

இல: 288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே: 021 222 2567 (C-929)


## தவறிவிட்டது

அ. நகுலேஸ்வரன் அவர்களின் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கிய பேர்ஸ் நாச்சிமார் கோவில், ஸ்ரான்லி வீதி, பெருமாள் கோவில், வீரமாகாளி கோவில், இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களுக்குள் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள், கீழ் உள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். (அ)

077 887 9812, 077 625 8162


விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS


UK- 1025/= Kg

0768226240 (C-848)

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை


# கண்ணீர் அஞ்சலி




அமரர்

## கார்த்திகேசு நடராஜா

(ஓய்வுபெற்ற அதிபர் - காரைநகர், K.K. நடராஜா மாஸ்டர்)

பிறப்பு 07.07.1929 — இறப்பு 17.12.2020



நல்ல உறவை இழந்து நா பதறுகிறது.
சொல்ல வார்த்தைகள் அற்று
சொற்களே தடுமாறுகின்றன.

காரைநகர் மண் பெற்ற
அதிசிறந்த கல்விமான்.
ஏராளம் பேரின் வாழ்வில் ஒளி
ஏற்றி வைத்த புண்ணியவான்.

ஆசிரியராய் அதிபராய்
அரும்பெரும் சேவையாற்றிய
மாசில்லா மனிதர் எங்கள் K.K. நடராஜா மாஸ்டர்.

பெற்ற பிள்ளைகள் போல்
ஊரப் பிள்ளைகளும் உச்சம் தொட உழைத்த உத்தமர் .

தன்நலன் மறந்து
பொதுநலப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி இன்னாள் வரை
இடையறாது ஊருக்குழைத்த உணர்வாளர்.

தேகநலன் பாரா
தேசநலன் விரும்பி.

சீரிலங்க வாழ்ந்த சீமான்
பேரிலங்க வாழ்ந்த வாழ்வுதனை
காரைநகர் மண்ணே கண்ணீரில் தோய
பாரைவிட்டு நீங்கினார்.

*ஆற்றாத துயரில் நாமும் பங்கெடுத்து*
*அன்னாரின் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இறப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-932)

உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்
**மணி ஐயப்பா நகைப் பூங்கா**
A9 வீதி, கிளிநொச்சி.
(கந்தசுவாமி கோவில் முன்பாக)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.